2.60.
3421

# குமரி மலர்

OFFICE OF THE REGISTRAR
19 MAY 1960
MADRAS

பதிப்பாசிரியர்

ஏ.கே.செட்டியார்

50 காசு

# உணவுச் சிறப்பு

காமதேனு வனஸ்பதியினால்
இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள், இனிப்பு பண்டங்கள் **காமதேனு** வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலை குறைவானது.

கண் பார்வைக்குத் தேவை யானதும், சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு:

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல்
கார்ப்பொரேஷன் லிட்.,**

**மேட்டூர் அணை, சேலம் ஜில்லா.**

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.




பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

# ANNOUNCEMENT.



## "TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE**
**THAT THEIR 4 CYLINDER**
**36 To 86 H. P.**
**AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**

**Post Box No. 221,**

**COIMBATORE.**

**Phone:** 409
1409

**Gram:** 'TEXTOLCO'

For Quality RAYON

&

TRAYOPHANE
(Transparent Cellulose Film)

☆

# THE TRAVANCORE RAYONS LIMITED

(India's Pioneer Manufacture of Rayon &
Cellulose film.)

*Factory* :
Rayonpuram P.O.
Kerala State.

*Sales Office* :
2/6 Second Line Beach
Madras - 1.

---

**Managing Agents :**
**Emcete & Sons (Travancore) Private Limited**

மலர் 17 இதழ் 2

சார்வரி—வைகாசி

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குரங்குத் தொல்லை —காந்தியடிகள் | 5 |
| 2. | இந்தோ ஐரோப்பியர்கள் | 7 |
| 3. | ஸ்டாபிலோகாகஸ் கிருமி | 13 |
| 4. | புகைப்படக் கலை —ஜான் டீ ரிட் | 15 |
| 5. | பெனுஸோஸின் | 17 |
| 6. | கொய்த மலர்கள் | 19 |
| 7. | மனிதனின் வயது | 31 |
| 8. | காப்பி | 33 |
| 9. | ஹாலந்தில் விவசாயம் | 35 |
| 10. | உப்புக் கரைத்த நீர் | 44 |
| 11. | எல்லோரும் ஓர் குலம் —அர்னுல்டு டொயின்பி | 47 |
| 12. | ஆளிலாப் பொறி முறை | 62 |
| 13. | மாறிவரும் ஆப்பிரிக்கா | 67 |

# குரங்குத் தொல்லை

**காந்தியடிகள்**

மக்கள், குரங்குகள் செய்யும் தொல்லையைக் கண்டு வேதனைப் படுகிறார்கள். அவை இறந்து போகாவா என்று எண்ணுகிறார்கள். எவரேனும் அவற்றைக் கொன்றுவிட்டால் மனத்துக்குள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனாலும் அதே சமயத்தில், இப்படிக் கொல்லலாமா? அநியாயமல்லவா? என்று கேட்கிறார்கள்.

சாஸ்திரங்களில் நல்ல பயிற்சியுடைய நண்பர் ஒருவர், "குரங்குகள் பயிர்களை அழிக்கின்றன; குழந்தைகளையும் சாமான்களையும் தூக்கிக்கொண்டுபோய்விடுகின்றன; பழங்களைத் தின்று நாசம் செய்து விடுகின்றன; தினந் தோறும் அவை பெருகிக் கொண்டு வருகின்றன; இந்த நிலையில் அஹிம்சா வாதி செய்யக்கூடியது யாது?" என்று கேட்கிறார்.

என்னுடைய அஹிம்சா தர்மக் கொள்கை எனக்கே சொந்தமானது; நானே வகுத்துக் கொண்டது. மிருகங்களைக் கொல்லாமை என்னும் கொள்கையை என்னால் பரிபூரணமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மனிதனை விழுங்கவோ, துன்புறுத்தவோ செய்யும் மிருகங்களையும் காப்பாற்றவேண்டும் என்ற இரக்க உணர்ச்சி என்னிடம் உண்டாகவில்லை. அத்தகைய மிருகங்கள் பெருகும்படி பார்த்துக்கொண்டிருப்பது தவறு என்றே கருதுகிறேன். ஆதலால் எறும்புகளுக்கும், குரங்குகளுக்கும், நாய்களுக்

கும் உணவளிப்பது கூடாது என்பது என் கொள்கை. நான் அவற்றின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, மனிதனுடைய உயிரைப் பலிகொடுக்க மாட்டேன்.

இந்த விதமாக யோசனை செய்து, நான் செய்திருக்கும் முடிவு இதுதான். மனிதருக்குத் தீங்குசெய்யும் குரங்குகளைக் கொல்லுவது மன்னிக்கத்தக்க விஷயம். அந்த விதமான கொலை கடமையாக ஆகிவிடுகிறது.

இந்த மாதிரி ஏன் மனிதர் விஷயத்திலும் நடக்கக் கூடாது என்று கேட்கக்கூடும். அதற்குக் காராணம், எவ்வளவு தீயவர்களாய் இருந்தாலும், அவர்களும் நம்மைப் போன்றவர்களாய் இருப்பதே யாகும். கடவுள் பகுத்தறிவை மிருகங்களுக்குக் கொடாமல் மனிதனுக்கே கொடுத்திருக்கிறார்.

# இந்தோ ஐரோப்பியர்கள்

இந்த உலகில் கிட்டத்தட்ட 110 கோடி மக்கள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உலக மக்களின் தனிப்பெரும் குடும்பமாக இது அமைந்திருக்கிறது. இந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து கண்டங்களிலும் பரவியிருக்கிருர்கள். ஆதியில் இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது நமக்கு இன்னமும் தெரியாமலேயே இருக்கிறது. மேலும் இவர்களுக்குள்ளேயே இத்தனை மொழித் தொடர்பு இருந்தும்—இவர்கள் ஒரே முன்னேரிடமிருந்து வந்த சந்ததிதான் என்பதாக ஊகம் இருந்தும்—இவர்களிலேயே ஒருவரை யொருவர் தெரியாது; அவ்வளவு பிரிந்து வாழ்கிருர்கள். ஐரோப்பாவிலிருந்து வ்ளாடிவாஸ்டக் வரையான பெரும் பிராந்தியத்தில் இவர்களில் 57 கோடிப் பேர் வசிக்கிருர்கள். சமீபக் கிழக்குப் பகுதி, ஈரான் பீடபூமி காகேஸஸ், வட இந்தியா இங்கெல்லாமாக 30 கோடி மக்கள் வசிக்கிருர்கள். மேலும் 28 கோடி மக்கள் அமெரிக்காகக் கண்டங்களிலும், ஆஸ்திரேலியாவிலும், ஆப்பிரிக்காவிலுமாக வசிக்கிருர்கள். குடும்பத் தலைவனை ஆங்கில மொழியில் "பாதர்" என்றழைக்கிருர்கள்; ஜெர்மன் மொழியில் இதற்கு 'வேடர்' என்ற வார்த்தையும், பிரெஞ்ச் மொழியில் 'பேரோ' என்ற சொல்லும், லத்தீனில் 'பேடர்' என்பதும், கிரேக்க மொழியில் 'பாடிர்' என்பதும், சம்ஸ்கிருத மொழியில் 'பிதா' என்ற சொல்லும் வழங்குகிறது. ஏழு என்ற எண்ணுக்காக ஆங்கிலத்

தில் வழங்கும் 'ஸெவன்' என்னும் சொல், சம்ஸ்கிருதத்தில் 'ஸப்த' என்று வழங்குகிறது.

இந்தோ-ஐரோப்பியர்கள் ஆதியில் ஒன்ருக வாழ்ந்திருந்து, பின்பு பல்லாயிரம் ஆண்டுக் காலத்தில் பிரிந்து போனுர்கள் என்பதாக ஒரு கருத்து இருக்கிறது. ஒரே மாதிரியான சூழ்நிலையில் இவர்களுக்குள் நெடுங்காலப் போக்குவரத்தும், பிற தொடர்புகளும் இருந்ததால்தான் மொழி ஒற்றுமை இவர்களிடையே வளர்ந்தது என்பது இன்னொரு சித்தாந்தம். இந்த இரண்டு கருத்துக்களிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. உண்மையில் இந்தோ-ஐரோப்பிய இனம், ஓரீஸ் என்ற பொது இனத்திலிருந்து கிளைத்ததாகும். *1786*ஆம் ஆண்டு வரையில் அறிஞர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் இந்த உண்மை தெரியாமலே இருந்தது. இன்று பொதுவாக ஒப்புக் கொள்ளப் பெறும் சித்தாந்தம் அந்த ஆண்டுக்கப்புறம் தோன்றியதாகும். அந்தச் சித்தாந்தப்படி, *6,000* ஆண்டுகளுக்கு முன்னல், உழவர்களும், ஆடு மாடு வளர்ப்போருக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது என்றும், அவர்கள் தகப்பன் வழிக் குடும்பங்களாக வாழ்ந்து வந்தார்கள் என்றும், அவர்கள் தமக்குள் திருமண தொடர்புவைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் தெரிகிறது. நிலம் அப்போதெல்லாம் தனியார் சொத்தாக இருக்கவில்லை. அந்த மக்களுக்கு பழுப்பு நிறத் தலை மயிரும், நீல நிறக் கண்களும் இருந்தன என்று ஊகிக்கப் பெறுகிறது. ஆதி நாளில் அவர்கள் ஆரல் ஏரிக்கும், ஹிந்துகுஷ் மலைக்குமிடையே வசித்து வந்தார்கள், பிறகு அவர்கள் மத்திய ஐரோப்பாவிலும், வடக்கு ஐரோப்பாவிலும் குடியேறினர்கள் என்றும், சமீப காலத்தில் அவர்கள் மேற்காசியாவிலும் பரவினர்கள் என்றும் ஊகிக்கப் பெற்றது.

இந்தக் கருத்தைப் பேராசிரியர் பால் தீம் என்பவர் இப்போது மறுக்கிறார்; சம்ஸ்கிருதம், ஒப்பீடுத் தத்துவம் இந்தோ-ஐரோப்பியச் சொல்லியல், சமயவரலாறு ஆகிய வற்றிலெல்லாம் அறிஞரான இந்த ஜெர்மன் பேராசிய ருக்கு 54 வயதாகிறது. ஸால்மன்மீன், ஆமை முதலிய சில பதங்கள் குறித்து அவர் தீவிர ஆராய்ச்சி நடத்தினார். இந்தோ-ஐரோப்பியப் பிராந்தியத்தில் இந்தப் பதங்கள் எவ்வாறுபரவி மாறியிருக்கின்றன என்பதை அவர் நன்கு ஆராய்ந்தார். 'லாக்ஸ்' என்பதிலிருந்து 'லாக்ஸ் சா' என் பது வரையிலான பதம் ஒன்று, ஸால்மன் மீனுக்கும், ஸால்மன் நிறமுள்ள பொருளுக்கும், பாரதம் போன்ற நாடுகளில் பெரிய தொகை ஒன்றைக் குறிப்பதற்கும், பெர்லின் நகரத்தைச் சேர்ந்த பேராசிரியர் தீம், இந்தச் சொல் பயன்படுவதற்குக் காரணம் கூறியிருக்கிறார்; தெற்கு அட்லாண்டிக் பகுதியிலிருந்து வடக்கு ஐரோப் பிய நதிகளுக்கு கணக்கில்லாத ஸால்மன் மீன்கள் பிர யாணம் செய்வதால்தான் 'பெரும் எண்ணிக்கை' என்ற ஒரு பொருளை பாரத நாட்டவர் தேர்ந்து கொண்டார்கள் என்று அவர் வாதிக்கிறார். இந்த நதிகளுக்குக் கிழக்கே யுள்ள நதிகளில் ஸால்மன் என்பதே கிடையாது. ஆனால் ஆமைகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குத் தெற்கேதான் முன்பு வாழ்ந்து வந்தன. இந்த உண்மைகளை வைத்துக் கொண்டு பேராசிரியர் தீம் பிராந்தியங்கள் பலவற்றை யும் வரையறுக்க முற்பட்டார். இந்தோ-ஐரோப்பியர் களிடையே வழங்கும் 'பீச் மரம்' என்ற சொல்லை வைத் துக் கொண்டு, அவர் முன்னாளில் இந்தோ-ஐரோப்பியர் கள் பீச் மரக் காடுகள் உள்ள இடங்களில்தான் வசித்து வந்தார்கள் என்று ஊகிக்கின்றார்; இந்த மாதிரிக் காடு கள் லிதுவேனியாவிலிருந்து கருங்கடல் வரை யான ஒரு கோட்டுக்கு மேற்கேதான் இருக்கின்றன.

தமது இந்தச் சித்தாந்தத்துக்கு ஆதரவாக, பேராசிரியர் தீம், பத மூலங்கள் பலவற்றையும், அவை சம்பந்தப் பட்ட உண்மைகளையும் மேற்கோளாகக் காட்டுகிறார். செடிகள், பழங்கள் சிலவற்றின் பெயர்கள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கிடையே பொதுவானவையா யில்லை என்ற உண்மையை வைத்துக் கொண்டு அவர் தமது சித்தாந்தத்தை நிரூபிக்கிறார்.

அடிப்படை இந்தோ-ஐரோப்பிய மொழியின் மூலம் பற்றி பேராசிரியர் தீம் சமீபத்தில் எழுதியிருக்கும் நூலில் மேற்கே பால்டிக் கடலோரமாக உள்ள பிராந்தியத்தில் தான் இந்த மொழி ஆதியில் தோன்றி யிருக்க முடியும் என்று அவர் கூறுகிறார். இப்போது புதிராயிருக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழி இந்தப் பகுதியில்தான் 6,000 ஆண்டுகளுக்கு முன்பு பேசப் பெற்று வந்தது என்று தமக்கு உறுதிப்பட்டு விட்டதாக அவர் சொல்லு கிறார். நம் கற்பனைக்கு எட்டாத பழம் பெறும் உலகம் முழுவதையும் அவர் ஆதியோடந்தமாக ஆராய்ந்தார்: வேதங்கள், உப நிஷத், தாவர இயல், சொல்லியல், பிராணி இயல், சரித்திர காலத்துக்கு முந்தைய வரலாறு இப்படி எத்தனையோ அம்சங்களையும் துருவிப் பார்த்து அவர் இந்த முடிவுக்கு வந்தார்.

இனி நடக்கக்கூடிய ஆராய்ச்சிகள் மூலம் இந்தப் புதிய கருத்து உறுதி செய்யப்படுமேயானால், அப்போ தும், இந்தோ-ஐரோப்பிய இனம் பற்றிய ஆதார உண் மைகள் புரியாத புதிராகவே இருக்கும். ஏனெனில், இந்தோ-ஐரோப்பியர் இந்நாளில் எங்கும் பரவியிருக்கி றார்கள்; ஒன்றாக வசிக்கிறார்கள், அருகருகே வசிக்கிறார் கள், ஒருவருக்கொருவர் விரோதத்தோடும் வசிக்கிறார்

கள். ஜெர்மனிய, ரோமானிய, ஸ்லாவிய மக்கட் பிரி வினரெல்லாம் இந்த இனத்தவர்தாம்; இதேபோல் ஸெல் பிக், பால்டிக், அல்பேனிய மொழிகள் பேசும் சிறு தொகை மக்களும் இந்த இனத்தவரே. மேலும் ஆரியர்களான ஈரானியரும், ஆப்கானியரும், மேற்குப் பாக்கிஸ்தானிய ரும், வட இந்தியரும் இந்த இனத்தவர்தாம். பாமீர் பீட பூமியிலும், சீன மாகாணமான லிங்கியாவிலும் இந்தோ-ஐரோப்பிய மொழியின் சாயல்களை இன்னமும் காண லாம். அமெரிக்கா கண்டுபிடிக்கப் பெற்றது; ஆஸ்தி ரேலியாவில் மேற்கத்திய மக்களின் குடியேற்றம் நடந் தது; உடனே இந்தோ-ஐரோப்பியர் புதிய இடங்களில் பரவ ஆரம்பித்தார்கள். ஆனல் குறிப்பாக லத்தீன் அமெரிக்காவில் அவர்கள் நீக்ரோக்களோடும், இந்திய ரோடும் மணத் தொடர்பு வைத்துக் கொண்டார்கள்; அதே சமயம் ஐரோப்பாவில் ஹங்கேரியர், எஸ்தோனி யர்கள், பின்லந்து மக்கள், லாப்லந்து மக்கள், டார்டார் கள் ஆகியோரிடம் கிழக்கத்திய சாயலும், ஆசியச் சாய லும் படிய ஆரம்பித்தன.

ஆயினும், மக்களின் மூலம் பற்றிய இந்த ஆராய்ச்சியி லிருந்து மனித குலம் முழுவதுமே கற்றுக் கொள்ளக் கூடிய அரிய படிப்பினை ஒன்று இருக்கிறது. இன்று வெவ்வேறு இனங்களாக, வெவ்வேறு மொழியினராக வேறுவேறு பண்பாடுகளுடன் வாழ்ந்துவரும் மக்களெல் லோரும் ஆதியில் ஒரே இனத்திலிருந்து வந்தவர்கள் தாம் என்பதே அந்தப்படிப்பினை; அதுமட்டுமல்ல, இன்று மிக நெருங்கி வாழும் இனத்தவரும், மொழியினரும், பண்பாட் டினரும் ஆதியில் முற்றிலும் ஒருவருக்கொருவர் அந்நியர் களாயிருந்தார்கள் என்பதும் ஒரு படிப்பினைதான். இந்தோ-ஐரோப்பியர்கள் இன்று ஒருவரையொருவர், அறிந்து கொள்வதில்லை; தமது சொந்த வரலாறே அவர்

களுக்குத் தெரியாது. கற்காலத்தில் நிலைமை இப்படியிருந்திராது என்று நிச்சயமாய் நம்பலாம். இந்தோ-ஐரோப்பியரின் மூலம் பற்றிய ஆராய்ச்சி யெல்லாமே கற்காலத்தின் அடிப்படையில்தான் ஆரம்பமாகிறது.

## வெய்யில் விசையால் ஓடும் அதிசயங்கள்

வெய்யில் விசையால் இயங்கும்—உலகிலேயே முதலாவது கார் நியூயார்க் நகரில் முதன் முதலாக ஓடியது. 1912-ஆம் வருடத்திய கார் ஒன்றின் கூறை மீது ஆயிரக்கணக்கான மணல் மின் கலங்கள் பொருத்தப் பெற்றிருக்கின்றன. இவை வெய்யிலை மின் விசையாக மாற்றுகின்றன. மின்விசை ஒரு கம்பி வழியாக 12 சாதாரண மின்சார உற்பத்திக் கலன்களில் (பாட்டரிகளில்) பாய்கிறது. காரை ஓட்டும் மின் மோட்டாரைச் சுற்றுவதற்கு வேண்டிய விசை இந்த பாட்டரிகளிலிருந்து வருகிறது. இந்தக் கார் மணிக்கு 20 மைல் ஓடுகிறது.

# ஸ்டாபிலோகாகஸ் கிருமி

மனிதனுக்கு ஓயாத தொல்லை தரும் கிருமிகளில் ஒன்று ஸ்டாபிலோகாகஸ். உடலில் கட்டிகளும் பருக்களும் தோன்றுவதற்கும், இரணத்தில் சீழ் கோத்துக் கொள்ளவும், கப ஜுரம் பரவவும் இது துணை செய்கிறது. பெனிஸிலின் கண்டுபிடிக்கப்பட்டபோது, இந்தக் கிருமிகளை ஒழித்துவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் இந்தக் கிருமி பெனிஸிலினை எதிர்த்து நிற்கும் ஆற்றலை வளர்த்துகொண்டு மனிதனை ஏமாற்றிவிட்டது.

இந்தக் கிருமிகள் சருமத்திலும், கைகளிலும், மூக்கிலும் தொற்றிக்கொண்டு பலுகுகின்றன. ஆரோக்கியமாக யிருக்கிறவர்களையும், டாக்டர்களையும், நர்ஸுகளையும்கூட இந்தக் கிருமிகள் பற்றிக் கொள்கின்றன. இவற்றை ஒழிப்பது பற்றி ஆராய பிரிட்டிஷ் சுகாதார அமைச்சகம் சிறப்புக் குழு ஒன்றை நிறுவிற்று. இந்தக் குழுசேகரித்த தகவல்களிலிருந்து ஸ்டாபிலோகாகஸ் கிருமிகள், மூக்கில் தங்கி பலுகுகின்றன என்று தெரிந்தது. இந்தக் கிருமிகள் மூக்கில் அடையாதபடி தடுக்க முயற்சி எடுத்துக் கொண்டால், விளைவுகளைத் தடுத்துவிட முடியும் என்று தெரிந்தது. இந்தக் கிருமிகள் கைகளிலும், சருமத்திலும் தொற்றிக்கொண்டு பரவினாலும் வாய்ப்புக் கிடைத்தால்தான் விபரீதங்களுக்கு வித்திடும். வைத்திய சாலைகளிலும் பேறுகால விடுதிகளிலும் பணியாற்றும் தாதிகளும் பிறரும் நோயாளிகளுங்கூட மூக்கில் தடுப்பு மருந்தைத் தடவிக் கொண்டால் இவற்றை, விரட்டிவிட முடியும். விஞ்ஞானிகள் 'நாஸப்டின்' என்றதோர் தடுப்பு

மருந்தைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். நியோமைஸின் என்ற பெனிஸிலின் இன மருந்தும் குளோர்ஹெக்ஸிடின் என்ற மருந்தும் ஸ்டாபிலோகாகஸ் கிருமிகளைக் கொல்லும் ஆற்றலுள்ளவை. நாஸப்டின் என்ற பூச்சு மருந்தில் இவை இருக்கின்றன. தினசரி இரண்டு வேளை இந்தப் பூச்சு மருந்தை மூக்கில் தடவிக் கொண்டால் நல்ல பயன் கிடைக்கும்.

கட்டிகளால் அடிக்கடி கஷ்டப்படும் நோயாளிகள் இந்த மருந்தை தவருது உபயோகித்ததில் பத்துக்கு எட்டுப்பேர் குணமடைந்தார்கள். இந்தக் கிருமிகள் விளைவிக்கும் தொல்லைகள் அதிகம். சீழ் பிடித்து கஷ்டப் படுவதை எவரும் விரும்பமாட்டார்கள். 'நாஸப்டி'னை தினந்தோறும் உபயோகிப்பதால் இந்தத் தொல்லையி லிருந்து விடுதலை பெற முடியும் என்ற உறுதி ஏற்பட்டு விட்டது.

# புகைப்படக் கலை

**ஜான் டி ரீட்**

சிறுவனாய் இருந்த காலத்தில் சிறு 'காமிரா ஒன்றைத் தூக்கிக் கொண்டு, கலிபோர்னிய குன்று களில் மற்றவர்களோடு நெடுந் தொலை போவது வழக் கம். அக் காலத்தில் 'காமிரா' என்பது அதிசய நிகழ்ச்சி களையும் அன்பர்களின் உருவங்களையும் பதிவு செய்யும் கருவி என்று நாங்கள் கருதினேம். அக்காலத்தில் எடுத்த படங்களைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். அவற்றை எடுக்கத் தூண்டியது அழகுணர்ச்சி அல்ல; கலை உணர்ச்சி என்று சொல்லவே முடியாது.

எனினும், இன்று பள்ளி மாணவர் எடுத்த புகைப் படங்களை நோக்கும்போது, இவற்றில் சில படங்களாவது சிறந்த கலைப் படைப்புகள் என்று சொல்லலாம். அவ் வாருயின், சில படங்களைக் கலைப் படைப்பு என்றும், வேறு சிலவற்றை வெறும் உணர்ச்சியைத் தெரிவிக்கும் நொடிப் படங்கள் என்றும் சொல்லுவதற்குக் காரணம் என்ன? கலை என்பதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித மாக இலக்கணம் கூறுவர். அது பற்றி தர்க்கம் செய்ய நான் விரும்பவில்லை.

பொதுவாகப் பலருக்கு நாம் காணும் இயற்கை உல கம் ஒழுங்கற்ற ஒரு குழப்பமாகத் தோன்றும். வீடுகள், மரங்கள், சாலைகள், வண்டிகள் முதலியவற்றையெல் லாம் நாம் பார்க்கிருேம். எனினும், நாம் காணும் காட்சி பெரும்பாலும் நம் உள்ளத்தை மகிழ்விக்கும் அமைப்பும் அழகும் உள்ளவையாக இல்லை.

குழப்ப நிலைக் காட்சி அளிப்பதாகத் தோன்றும் இயற்கையை ஒருமுகப்படுத்தி நம்மை மகிழ்விக்கச் செய்யக் கலை துணை செய்கிறது. கவிஞன் ஒருவன் தான் காணும் பலவகைப் பொருள்களிலிருந்து சிலவற்றைத் தெரிந்தெடுத்து, அவற்றை முறைப்படுத்தி, அழகமைந்த ஒரு புதுமையைத் தன் மனப் பண்பால் படைக்கிறான். அவ்வாறே ஒருநாவலாசிரியனும் தான்காணும்பலவற்றில் சிலவற்றை முறைப்படுத்திப்புதுமை படைக்கிறான் எந்த நாவலும் வாழ்க்கையை உள்ளவாறு காட்டுவதில்லை.

வர்ணச் சித்திரம் தீட்டுவோனும் தான் காணும் உலகத்தின் இலட்சிய வடிவத்தை வடித்துத் தரவே கருதுகிறான். ஓவியனுக்கும், இசை வாணனுக்கும் இல்லாத இடர்ப்பாடு புகைப்படம் எடுப்பவனுக்கு உண்டு. புகைப் படக் கலைஞன் புதுமை புனைய முடியாது; வெறும் கற்பனையை அவன் உருவாக்க முடியாது. அவனது 'லென்ஸ்' உண்மை வடிவத்தைத்தான் படமாகப் பிடிக்க முடியும். அவ்வாறாயின், அவன் செய்வது எவ்வாறு புதுமையான கலைப்படைப்பாகும்? அவன் தான் எடுக்கவேண்டியவை யாவை என்பதை எண்ணிப்பார்த்து, அவற்றைத் தேர்ந்தெடுக்கிறான். வேண்டாதவற்றை அவன் விட்டுவிடலாம். 'காமிரா'வைப்பிடிக்கும் கோணம், ஒளியின் அளவு, உருவாக்கும் முறை, பிலிமின் தன்மை ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு அவன் பலவற்றை விட்டுவிட்டு, சிலவற்றை மட்டும் சிறப்பாகக் காட்டலாம்.

முக்கியமாக, புகைப் படம் எடுப்பவனுக்கு, கலைஞனின் உள்ளமும் கண்ணும் இருந்தால், அவன் கலைஞன் ஆவான். சில சமயங்களில் கட்புலனாகும் உலகின் குழப்ப நிலையில் ஒரு வகை அழகைக் கண்டு, அதனைத் தன் கலைத் திறனால் நிலையான அழகும் பொருளும் அமைந்ததாகப் பதிவு செய்து விடலாம். அவ்வாறு அவன் செய்யும்போது, புகைப் படம் எடுப்பது ஒரு கலை ஆகின்றது. புகைப்படக் கலை சிறந்த ஜனநாயகக் கலை.

## பெனஸோஸின்

வலி தெரியாமல் உறங்கி விடுவதற்கு இப்பொழுது வழக்கமாகக் கொடுக்கப் பெற்று வருவது மார்பின் என்ற மயக்க மருந்து. இதை விட மிகவும் சக்தி வாய்ந்ததும், ஆனால் பத்திரமானதுமான புது மருந்தை ஒன்றை அமெரிக்காவில் கண்டு பிடித்திருக்கின்றனர். இப்புது மருந்தின் பெயர், "பெனஸோஸின்".

புற்று நோய், பிரசவ வேதனை, போன்ற மிகக் கடுமையான தாங்க முடியாத வலிகளுக்கு இந்தப் புது மருந்து ஒரு சஞ்சீவியாகப் பலனளித்து வருகிறது. ஆஸ்பத்திரிச் சோதனைகளில் இது 90 சதம் வெற்றி பெற்றிருக்கிறது. மார்பின் மருந்துக்குள்ள வெற்றியை விட இது அதிகமாகும். தேவையான மார்பின் அளவில் மூன்றில் ஒரு பங்கிலிருந்து ஏழில் ஒரு பங்கு வரை இந்தப் புது மருந்தில் உட்கொண்டால் போதுமானது.

மார்பின் உட்கொள்வதால் ஏற்படும் சில்லரை உபாதைகள் (குமட்டல், வாந்தி எடுத்தல், ரத்த அழுத்தம் குறைந்து போதல் முதலியன) இந்தப் புதிய மருந்தில் குறைவாகும். பத்திரமாக உபயோகிக்கக் கூடியது. மார்பின் அளவுக்கு இது "பழக்கமாகி" விடாது.

ரசாயனப் பொருள்களிலிருந்து இதைச் சுலபமாகத் தயாரிக்கலாம். அபினி தேவையில்லை.

டாக்டர் இவரெட் ஐ. மே என்பவரும், டாக்டர் நாதன் பி. எட்டி என்பவரும் இந்தப் புது மருந்தைக் கண்டு பிடித்தனர். தயாரிப்பு முறையை இவர்கள் உரி

மையாக்கிக் கொண்டாலும் (பேடன்ட்) அமெரிக்க 'அர சாங்கத்துக்கு அந்தச் செய்முறையின் உரிமைகள் அனைத் தையும் கொடுத்து விட்டனர்.

அமெரிக்க அரசாங்கம் இந்த மருந்தைத் தயாரிக்கும் முறையை உலக நாடுகள் அனைத்துக்கும் யாதொரு கட் டுப்பாடுமின்றி தெரிவித்துள்ளது.

ரசாயனச் சஞ்சிகையில் இரண்டு விஞ்ஞானக் கட்டு ரைகளில் இந்த மருந்தைப் பற்றி முழுத் தகவல்களும் பிர சுரிக்கப் பெற்றன. இந்தத் தகவல்களைக் கொண்டு அந் தந்த நாட்டு மருந்து தயாரிப்பாளர்கள் தங்களுடைய அர சாங்கங்களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இந்தப் புது மருந்தைத் தயாரிக்கலாம். அமெரிக்க அரசாங்கம் யாதொரு கட்டணங்களையோ லைசென்ஸுகளையோ கட் டுப்பாடுகளையோ விதிக்கப் போவதில்லை. ஆனால் இவ் வாறு வெளிநாடுகளில் தயாரிக்கப் பெறும் மருந்துகளை அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யக்கூடாது.

சென்ற ஆண்டில் 3000 பேருக்கு மேல் இந்த மருந் தைக் கொடுத்துப் பரிசோதித்தனர். மார்பினை விட மிகச் சிறந்தது என்று சோதனையின் விளைவாகத் தெரிந்தது.

### மயக்க மருந்து

புது மருந்து ஒரு வழக்கமாகிவிடா தென்றாலும் அது மயக்க மருந்துதான் என்றும், கண்டிப்பான கட்டுப்பாடு மேற்பார்வைகளின் பேரில்தான் இதைத் தயார் செய்ய வேண்டுமென்றும் டாக்டரின் உத்தரவின் பேரில் டாக்ட ரின் மேற்பார்வையில்தான் இதை உபயோகிக்கலாமென் றும் எச்சரித்துள்ளனர்.

# கொய்த மலர்கள்

## பிரார்த்தனே

**பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்து என்னைப்**
**போகவிடா**
**மின்னவன் மின்னவன் வேதத்தின் உட்பொருளாகிய**
**அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனே ஆர்வத்தால்**
**என்னவன் என்னவன் என்மனத்து இன்புற் றிருப்பனே**

—சுந்தரமூர்த்தி நாயனுர்

## பிரார்த்தனே

தன்னுடைய குற்றத்தை மறைக்க முயல்பவன் வஞ்சகமே உயிர் பெற்றதுபோல் வாழ்ந்து அழிகின்ருன். மனிதன் மிருகமும் அல்லன்; கடவுளும் அல்லன். தெய்வத் தன்மை யடைய முயலும் கடவுள் சிருஷ்டி ஆவான். தவறை உணர்வதும் தன்னைத் தானே திருத்திக் கொள்வதும் தான் அதற்குச் சாதனங்கள். தவறை உணர்ந்து கடவுளிடம் மன்னிப்புக் கேட்ட உடனே நம்முடைய பாவம் நீங்கி, புதுவாழ்வு உண்டாகிறது. உண்மையான பச்சாத்தாபமே பிரார்த்தனைக்கு அடிப்படையாகும்.

பிரார்த்தனை என்பது வாயால் மட்டும் உச்சரிப்பது அன்று. நல்ல காரியங்கள் செய்வதானுல்தான் அதற்கு அர்த்தமுண்டு. அப்படியானுல் பிரார்த்தனை செய்ய வேண்டிய முறை யாது? நமது மனத்தில் ஒளிந்துகிடக்கக் கூடிய வகுப்புத் துவேஷத்தையும் கெட்ட எண்ணத்தையும் ஒரு ரேகை கூட இல்லாமல் மனத்தைச் சுத்தம் செய்வதேயாகும்.

—காந்தியடிகள்

**எதற்காக?**

குடி, அபினி, புகையிலை இவற்றை உலகம் முழுவதிலும் உபயோகிப்பது ருசிக்கல்ல; சந்தோஷத்திற்கல்ல; விளையாட்டிற்கல்ல; ஆனல், மனச்சாட்சியின் வேண்டுகோளை மறைப்பதற்கே.

குடிவெறியில் இல்லாதவன் நினைக்கவும் ஒவ்வாத காரியத்தைக் குடிவெறியில் உள்ளவன் செய்கிருன்.

—டால்ஸ்டாய்

**சத்திய நெறி**

சத்திய நெறியில் செல்பவன் இந்த உலகத்தில் எதற்கும் அஞ்ச வேண்டிய நிலையே ஏற்படாது. அத்தகைய நெறியில் செல்பவர்கள் சிலரே.

—ஓர் அறிஞர்

**நல்ல ஆட்சி**

விவேகமாகவும், சிக்கனமாகவும் நடக்கும் ஓர் ஆட்சி வேண்டும். அந்த ஆட்சி, மக்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாதவாறு தடுக்கவேண்டும். மற்றபடி அவர்களுக்கு அவரவர் தொழிலைச் செய்யவும், முன்னேற்றமடையவும் உரிமை இருக்க வேண்டும். தொழிலாளர் உழைத்துப் பெற்ற உணவை அந்த ஆட்சி பறிக்கலாலாது. நல்ல ஆட்சி எது என்று தொகுத்துச் சொன்ருல், இதுவே நல்ல ஆட்சி என்று சொல்லவேண்டும்.

—தாமஸ் ஜெபர்ஸன்

**பசியும் வேதாந்தமும்**

பசியுடன் உள்ள ஒருவனுக்கு வேதாந்தக் கருத்தைப் புகட்டுவதைவிட, ஒரு வாய்க் கஞ்சி ஊற்றுவது மேல்.

—விநோபா பாவே

## சிரிப்பும் அழுகையும்

சிரித்துக் கொண்டே தீயசெயல்களைச் செய்கிறவர்கள் அழுது கொண்டே தாங்கள் செய்த செயல்களின் பலனை மிகக் கடுமையாக அநுபவிப்பார்கள்.

—குர் ஆன்

## பேணாத பண்டம்

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது; எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பழக்கத்தில் இல்லாத திறமை இழந்து விடப்படும், அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும், வீரரையும் கொண்டாடாத தேசத்தில், அறிவும், லோகோபகாரமும், வீரமும் மங்கிப்போகும்.

—பாரதியார்

## நலனிலும் தீமையிலும் தோழமை

ஓர் வேடன் விஷம் பூசிய அம்பை மான்களை நோக்கி விட, அது குறிதவறி ஒரு மரத்தில் பாய்ந்தது. விஷம் மரம் முழுதும் பரவியதால், இலைகள் உதிர்ந்தன; மரமும் உலர்ந்தது. மரத்தின் பொந்தில் ஒரு கிளி பல நாட்களாக வாழ்ந்து வந்தது. அதற்கு மரத்தினிடம் அதிகமான அன்பிருந்தது. ஆதலால் மரம் உலர்ந்தும்கூட, கிளி அதனைவிட்டுச் செல்லவில்லை. மரத்தைவிட்டு வெளியே செல்வதில்லை; உண்பதுமில்லை; நீரும் பருகுவதில்லை. மரத்துடன் தானும் அழிந்துவிட உறுதிகொண்டது அக் கிளி.

அக் கிளியின் தாராள மனப்பான்மை, மன உறுதி. நலனையும் தீமையையும் சமமாகக் கருதல், தன்னலமறுப்பு இவற்றை அறிந்த இந்திரனே அங்கு வந்தான்.

இந்திரன் கிளியை நோக்கிப், "பறவையே! மரத்தில் இலைகளோ, பழங்களோ இல்லை. எல்லாப் பறவைகளும் வெளியே சென்று விட்டன. இப்பெரிய காட்டில் நல்ல இலைகளும் பழங்களும் உள்ள பல மரங்கள் இருக்கின்றனவே, அவற்றிலும் நீ வாழ்வதற்கேற்ற பல பொந்துகள் இருக்கின்றன. இம் மரம் அழிந்து போயிற்று. இதில் மறுபடியும் இலை, பழங்கள் தோன்ரு. இவற்றை எண்ணி, வேறு மரத்திற்குச் சென்று பிழைத்துக் கொள்" என்று கூறினன்.

"தேவராஜனே! நான் இம்மரத்தில் தோன்றினேன் இதிலேயே நான் வளர்ந்தேன். இது என்னை மைந்தனைப் போல் காத்தது, பகைவர் அழித்து விடாதவாறு என்னைப் பாதுகாத்து வந்தது. அவ்வாறிருக்க, எல்லாவற்றையும் மறந்து, இதற்குப் பெரிய இன்னல் ஏற்பட்டபோது இதைவிட்டு, சுயநலத்திற்காக நான் எப்படி வெளியேறலாம்? இதனுடன் சேர்ந்து துக்கத்தையும் அனுபவிப்பதை நான் இன்பமாகக் கருதுகிறேன். நீங்கள் தேவராஜனயிருந்தும் தவருன பாதையை எனக்குக் காண்பிக்கலாமா? இது முடியாது" என்றது கிளி.

கிளியின் இனிய அன்பு சொரியும் சொற்களைக் கேட்ட இந்திரன் மகிழ்ந்தான். இரக்கம் கொண்டான்.

"உன்னிடம் அன்பு கொண்டேன் கிளியே! வேண்டியதைக் கேள். தருகிறேன்" என்ருன் இந்திரன்.

"தேவராஜனே! இம் மரம் பழைய நிலையைப் பெறுமாயின், நான் மிகவும் இன்பம் பெறுவேன்" என்றது சுயநலப் பற்றற்ற அக் கிளி.

இந்திரன் அமிர்தத்தைத் தெளித்தான். மரம் பழைய நிலை பெற்றது. கிளியும் இன்ப முற்றது. முடிவில் கிளியும் நற்கதி பெற்றது.

## பெரும் விபத்து

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மோட்சத்தைத் தானே தேடிக்கொள்ளவேண்டும்; வேறுவழி கிடையாது. தேசங்களும் அப்படியே. தற்போதுள்ளவற்றை விடச் சிறந்த, புதிய ஸ்தாபனங்கள் ஏற்படும் வரையில், பழைய ஸ்தாபனங்களைத் தகர்க்க முயலுதல் பெரும் விபத்தாக முடியும். வளர்ச்சி எப்போதும் படிப்படியாகவே ஏற்படக்கூடும்.

—விவேகாநந்தர்

## விடா முயற்சி

சிலர் கல்வி பழகமாட்டார்; சிலர் பழகியும் தேற மாட்டார்.

சிலர் கேள்வி கேட்க மாட்டார்; சிலர் கேட்டும் விடைப் பொருள் தெரிந்து கொள்ள மாட்டார்.

இவர்கள் எல்லாம் மனம்சோர்ந்து போகவேண்டாம்.

சிலர் எதையும் தெளிவுறக் காணமாட்டார்; சிலர் தெளிந்தும் கலங்குவார்,

இவர்கள் எல்லாம் மனம்சோர்ந்துபோகவேண்டாம்.

சிலர் சாதனை செய்வதில்லை; சிலர் செய்தாலும் உறுதி அடைவதில்லை.

இவர்கள் எல்லாம் மனம்சோர்ந்து போகவேண்டாம்

விடாமுயற்சி ஒன்று இருந்தால் போதும். பிறர் ஓர் அடியில் செய்வதை இவர்கள் நூறு அடியில் செய்வார்கள். பிறர் பத்து அடியில் செய்வதை, இவர்கள் ஆயிரம் அடியில் செய்வார்கள்.

இந்த விடாமுயற்சி விதிப்படி நடப்பவன் எத்தனை மூடனாயினும் மேதாவியாகி விடுவான்; எத்துணை பலவீனனாயினும் வலிமை பெற்று விடுவான்.

—கன்பூஷியஸ்

**உண்மையான கல்வி**

"எது சுதந்திரம் அளிக்குமோ அதுதான் கல்வி" என்ற ஆன்ேறார் வாக்கு, இப்பொழுதும் உண்மையானதே. அவர்கள் கூறும் கல்வி வெறும் ஆத்மஞானம்மட்டுமன்று. அவர்கள் கூறும் சுதந்திரம் வெறும் ஆத்ம விமோசனம் மட்டுமன்று; அறிவு என்பதில் மனித சமூகத்துக்குச் செய்ய வேண்டிய சேவைக்கு உபயோகமான சகல பயிற்சியும் அடங்கும். சுதந்திரம் என்பதில் சகலவிதமான அடிமைத் தனத்தினின்றும் விடுதலை பெறுவதும் அடங்கும்.

அடிமைத்தனமானது, பிறருக்கு அடிமையாய் இருத்தல் என்றும், தம்முடைய தேவைக்கு அடிமையாய் இருத்தல் என்றும் இருவகைப்படும். இந்த லட்சியத்தைப் பெறுவதற்காக மட்டும் தேடும் அறிவே உண்மையான கல்வியாகும்.

—காந்தியடிகள்

**பாமதி**

ஆயிரம் வருஷத்து முன்னே வாசஸ்பதி மிச்ரர் என்ற ஒருவர் இருந்தார். அவருக்குச் சகல சாஸ்திரங்களும் தெரியும். யோக சாஸ்திரம், நியாய சாஸ்திரம் முதலியவற்றையெல்லாம் கரை கண்டவர். வேதத்தினுடைய உபநிஷத் பிரிவாகிய ஞானப் பிரிவை விசாரம் செய்யும் சாஸ்திரம் வேதாந்த சாஸ்திரம். அதிலேயே கர்மாஷ்டானங்களைப் பற்றி விசாரிப்பது மீமாம்சை. இவை இரண்டையும் அவர் கரைகண்டவர்.

சிறு வயதிலேயே அவர் புத்தகம் எழுத ஆரம்பித்தார். கல்யாணமாகி மனைவி வீட்டுக்கு வந்தும் அவர் அப்படியே எழுதிக் கொண்டிருந்தார். அவர் மனைவி அவ

ருக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்துகொண்டே யிருந்தாள். கருமமே கண்ணுயிருந்த அவர், ஒரே நோக் கத்துடன் புத்தகத்தை எழுதி முடித்தார்.

புத்தகத்தை எழுதி முடித்ததும் பார்த்தால் அவருக்கு வயது அறுபதாகிவிட்டது. அவர் மனைவிக்கு வயது ஐம்பது ஆகிவிட்டது. இருவரும் கிழவர்கள் ஆகி விட்டனர்.

"இந்தப் புத்தகத்தை எழுதி உங்களுக்குப் புண்ணி யத்தைத் தேடிக்கொண்டு விட்டீர்கள். எள்ளும் தண்ணீ ரும் இறைக்க நமக்கு ஒரு பிள்ளை இல்லாமல் போய்விட் டதே! எனக்கு எப்படி நல்ல கதி கிடைக்கும்?" என்றார் அவர் மனைவி.

"கல்யாணம் செய்துகொண்டு உனக்கு ரொம்பத் துரோகம் செய்துவிட்டேன். சரி. கவலைப்படாதே. உன் பெயரையே இப்புத்தகத்திற்கு வைத்து விடுகிறேன். தத்துவத்தைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று இந்தப் புத்தகத்தை எடுக்கிறவர்கள் எல்லோரும், முதலில் உன்னை நினைக்கும்படியாகச் செய்துவிடுகிறேன். அதனு லேயே உனக்கு நல்ல கதி கிடைத்துவிடும்" என்று சொல்லி அப்புத்தகத்திற்குத் தம் பத்தினியின் பெய ராகிய பாமதி என்பதையே சூட்டிஞராம்.

எந்த மதத்தவராக இருந்தாலும் சரி, தத்துவ விசா ரணை செய்யும் கிரந்தம் எழுதுவதென்றால் சங்கராச்சாரி யாருடைய பாஷ்யத்தை அப்படியே எழுதுகிறார்களோ இல்லையோ, பாமதியிலிருந்து பங்க்தி எடுத்து எழுதாமல் இருக்க மாட்டார்கள். அவ்வளவு உயர்ந்த புத்தகம் அது.

—காஞ்சி காமகோடி பீடாதிபதி

## சேரமானும் வண்ணானும்

சேரமான் பெருமாள் நாயனர் சேரநாட்டு மன்னர். அவர் ஒருநாள் யானை சேனை புடைசூழ நகர்வலம் வந்த போது, அவரெதிரே ஒரு வண்ணான் வெளுத்த வடிவின னைகப் போந்தான். மழை நீரால் அவன் தலைமீதிருந்த உவர்மண் கரைந்து ஒழுகி அவன் உடலை வெளுக்கச் செய் தது. அவ்வெண்ணிறம் திருநீறு பூசியவேடம்போல் சேரர் பெருமானுக்குப் புலனுயிற்று. ஆனதும் சேரர் பெருமான் யானை விட்டிழிந்து வண்ணான் காலில் விழுந்தார். அவன் அஞ்சி, "அடி வண்ணான்" என்று அலறினன். மன்னர் "அடிச்சேரன்" என்று விழுந்து விழுந்து வணங்கினர் மன்னர் பிறப்பெங்கே? வண்ணான் பிறப்பெங்கே? மன்னர் சிறப்பெங்கே? வண்ணான் சிறுமை எங்கே? எல்லாம் அன் புக்கு முன் ஓடின.

—திரு.வி.க

## வாழ்வும் அறிவும்

வயதாக வயதாக எவ்வளவோ விஷயங்கள் நமக்குப் புலப்படுகின்றன. ஆயினும் என்ன? நமக்கு அறிவு ஏற் படும் போல் தோன்றும்போதுதான் உலக நாடக மேடை யில் நாம் ஆடும் ஆட்டமும் ஓய்ந்து விடுகிறதே.

—விவேகாநந்தர்

## புத்தகங்கள் இல்லையேல்

புத்தகங்கள் மட்டும் இல்லையென்ருல், கடவுள் இல்லை; நீதி சகிக்க முடியாததாக இருக்கும்; இயற்கை விஞ்ஞானம் குத்திட்டு அசையாமல் நின்று விடும்; தத்து வம் முடமாகி விடும்; எழுத்துக்கள் ஊமையாகி விடும்; சகலமுமே இருண்டுவிடும்.

—பார்த்தலோனி

## புத்தகங்கள்

புத்தகங்களின் எண்ணிக்கையால் புத்தகாலயம் மதிப்புப் பெறுவதில்லை. சிறந்த புத்தகங்கள் வைக்கப் பெறுவதாலேயே சிறப்புப் பெறுகின்றது.

—விநோபா பாவே

## சத்தியமும் பணமும்

எப்பொழுது நாம் அறநெறியில் பிழைப்பைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்னும் நியதியை ஏற்கின்றேமோ, அப்பொழுதே மனிதர்களாக உயர்ந்தோம். மனிதரிடம் தர்ம புத்தி உள்ளதே அதன் தனிச் சிறப்பு. ஆயினும் இப்பொழுது மனிதன் அறநெறியை விட்டுப் பண நெறியில் செல்ல ஆரம்பித்துள்ளான்.

பணமும் அறமும் மாறுபட்டு நிற்கும்பொழுது, நாம் அறத்தை ஏற்றுக்கொண்டு, பணத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று விதித்துள்ளார்கள். இவைகளில் மாறுபாடு உண்டாகாத வரையில் பணத்தின் ஆதிக்கமே வெல்லும். இந்த நியமத்தை நம் மூதாதையர்கள் செவ்வனே விளக்கியுள்ளார்கள்.

நாம் இன்று அறத்திற்கும் இடம் கொடுக்க விரும்புகிறேம்; ஆயினும் பொருளிற்கும் அறத்திற்கும் மாறுபாடு தோன்றினல், பொருளை ஏற்று அறத்தை விடுகின்றேம்.

சத்தியமும் பணமும் மோதிக் கொண்டால், நாம் பணத்தைப் பற்றிக்கொண்டு, சத்தியத்தை விட்டு விடுகிறேம்.

மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தாத சூழ்நிலையில் மாட்டிக் கொண்டுள்ளான்.

—விநோபா பாவே

### ஹாலந்துப் பழமொழி

மூளையைக் குளிர்ச்சியாகவும், பாதங்களைச் சூடாகவும் வைத்துக் கொள்.

### மனம்

மனமே! உன்னில் நீ நிலைத்திரு.
அங்கும் இங்கும் அலைவது ஏனோ?
உனது உள்ளத்தையே நீ சோதித்துப் பார்.
நீ விரும்புவதை எல்லாம் அங்கு நீ பெறுவாய்.

—வங்க கீதம்

### வக்கீல்கள் கடமை

வக்கீல்களின் கடமை என்ன தெரியுமா? எப்போதும் நீதிபதிகளின் முன் உண்மையை எடுத்துக் காட்டி, அந்த உண்மையை நீதிபதிகள் கண்டறிந்து கொள்வதற்கு உதவி செய்ய வேண்டியதே; குற்றவாளிகளை நிரபராதிகள் என்று என்று ஒருபோதும் அவர்கள் ருஜுப்படுத்தக் கூடாது.

—காந்தியடிகள்

### தற்பெருமை

தற்பெருமை பலரைப் பெருந் தவறுக்கு உள்ளாக்குகிறது. சில சமயங்களில், குணப்படுத்த முடியாத குருட்டுத்தனத்தில் அவர்களை வீழ்த்தி விடுகிறது.

அறியாமையால் தங்களைப் பற்றிப் பெரிதாகப் பாவித்துக் கொள்ளும் அகந்தையில் அழிந்தவரது வீழ்ச்சி, உனக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும். உன்னை எப்போதும் அடக்கம் உடையோனாக அது ஆக்கட்டும்.

—ஓர் அறிஞர்

**நம்பிக்கை**

விசுவாசம் அல்லது நம்பிக்கை அசாத்தியத்தைச் சாத்தியமாக்கும். விசுவாசம் என்ற படகு தரையின் மீது கூடச் செல்லவல்லது. சந்தேகப் பேர்வழியோ கணுக்கால் ஜலத்திலும் கூட மூழ்கி மரிக்கிறான்.

—சுவாமி விரஜாநந்தர்

**நல்ல நாள்**

பிரயாணத்திற்காக ஒரு நல்ல நாளைக் குறித்துக் கொண்டு நான் எங்கும் செல்வது என் வழக்கமன்று. பலராலும் கெட்ட நாள் என்று கருதப் பெறும் அன்று புறப்பட்டபோதும், வெற்றிகரமான பலன்கள் ஒருவருக்கு உண்டாக்கியிருப்பதை நானே பார்த்துள்ளேன். ஏதேனும் கேடு விளையுமோ என ஐயுற்று அஞ்சும் ஒருவனுக்கே துயரமான நிகழ்ச்சிகள் பொதுவாக விளைகின்றன; எனக்கு அத்தகைய அச்சங்கள் இல்லை. ஆதலின், பொல்லாத நாட்களில் புறப்படுவதால் நேரும் அக்கேடுகளாலும் யான் என்றும் வருந்தியதுமில்லை.

—சுவாமி விஞ்ஞானாநந்தர்

**பெரியோர் வாக்கு**

ஒரு நினைவை விதை, ஒரு செயலை அறுவடை செய்வாய்; ஒரு செயலை விதை, ஒரு பழக்கத்தை அறுவடை செய்வாய்; ஒழுக்கத்தை விதை, நீ விதியை அறுவடை செய்வாய்.

**உண்மை அழகு**

உருவத் தோற்றத்தில் எதுவும் இல்லை; அது அழிந்து போய்விடக் கூடியது. நிலைத்திருப்பது நல்ல குணந்தான், அது மாறி மாறி அவதாரம் எடுக்கக்கூடியதும் ஆகும். இதயப் பரிசுத்தத்தில்தான் உண்மையான அழகு குடி

கொண்டிருக்கிறது. புறத் தோற்றம் எப்படியிருந்த போதிலும், ஆத்மாவில் உண்மையைக் கொண்டிருக்கும் ஒரு முகந்தான், உண்மைக் கலைஞனுக்கு அழகாகத் தோற்றமளிக்கிறது. உண்மை தவிர வேறு அழகு எதுவும் கிடையாது.

—காந்தியடிகள்

## பலி

காட்டெருமைகளும் ஆடுகளும் தேவியின் குழந்தைகள்; அவற்றைப் பலியிடுவதைத் தேவி விரும்பாள்.

பலியிட விரும்பின், உனது ஆணவத்தைப் பலியிடு. உனது சுக இச்சையைப் பீடத்தில் சமர்ப்பி.

—ஒரு வங்காள பக்தர்

## மின்னுவதெல்லாம் பொன்னல்ல

விளம்பரம் ஒன்றைப் படித்துவிட்டு எட்டணைவுக்கு ஒரு தோலா தங்கம் வாங்குவதற்காக அநேகர் விரைந்தோடுகின்றனர். ஆனல் நிஜமான தங்கம் ஒன்றுதான் தங்கமாகும். பளபளப்பாக மின்னுவதெல்லாம் பொன்னுகாது; பொய்யும் பித்தலாட்டமுமேயாகும். அதையெல்லாம் நாடுவதால், உள்ள எட்டணைவும் நஷ்டமாவதுதான் மிச்சம்.

—சுவாமி விரஜாநந்தர்

# மனிதனின் வயது

மனித உடலின் தன்மைகள் உள்ள விலங்கினம் தோன்றி எவ்வளவு காலம் இருக்கலாம் என்பது ஓர் ஆராய்ச்சி. அத்துறையில் ஜோஹானஸ் ஹர்ஸெலர் என்னும் சுவிட்ஸர்லாந்து நாட்டு விஞ்ஞானி மூன்று ஆண்டுகளுக்கு முன் புதுமையான கருத்து ஒன்றைத் தெரிவித்தார். மனித உடல் இயல்கள் திட்டமாக உள்ள விலங்கினம் குறைந்தது ஒரு கோடியே இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் இருந்ததாக அவர் கூறினர்.

1956-ஆம் ஆண்டு முதல் இவ்வகை விலங்குகளின் எலும்புகள் மத்திய இத்தாலியில் டஸ்கனியிலுள்ள மென்மையான நிலக்கரிப் பாளங்களில் எடுக்கப் பெற்றன. அறுபதுக்கும் அதிகமான எலும்புக்கூடுகள் கிடைத்துள்ளன. 1958-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட முழு எலும்புக் கூடு என்று சொல்லக்கூடிய எலும்புக்கூடு கிடைத்தது.

இந்தப் பழங்காலத்து எலும்புகளெல்லாம் சுவிட்ஸர் லாந்தில் பேசல் என்னும் இடத்திலுள்ள அரும்பொருள் களஞ்சியத்தில் வைக்கப் பெற்றன. அங்கு டாக்டர் ஹர் ஸெலரும், மற்ற விஞ்ஞானிகளும் அவற்றைக் கருத்துடன் ஆராய்ந்தார்கள்.

டாக்டர் ஸ்டிராஸ் என்னும் அமெரிக்கர் மூன்று ஆண்டுகள் ஐரோப்பாவில் தங்கி, முழு எலும்புக்கூட்டை ஆராய்ச்சி செய்தார். மனித இன வரலாற்று நூலில் புலமை மிக்கவர் அவர்.

புதிதாகக் கண்டு பிடிக்கப் பெற்ற எலும்புக் கூடு பழங்காலத்துக் குரங்கின் எலும்புக் கூடாகவும் இருக்க முடியாது, மனிதக் குரங்கின் எலும்புக் கூடாகவும் இருக்க முடியாது. அந்த எலும்புக்கூட்டின் பல், மண்டையோடு உறுப்புக்கள் முதலியவை அது மனித இனத்தின் மூல வகையைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்று காட்டுகின்றன என அவர் கூறுகிறார்.

மனித இயல்புகள் உள்ளதாக விளங்கிய மிகப் பழங் காலத்து விலங்கு இன்றைக்கு $7\frac{1}{2}$ லட்சம் ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில்தான் இருந்திருத்தல் வேண்டு மென்று இதுகாறும் கருதினர். அக்கருத்தை மாற்றிவிட் டது சில ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் கண்டு பிடிக் கப்பட்ட புதிய எலும்புக்கூடு

அந்த எலும்புக் கூட்டில் வாழ்ந்த விலங்கு நான்கு அடி உயரம் உள்ளதாக இருந்திருத்தல் வேண்டும்; அதன் எடை 100 ராத்தலுக்குச் சிறிது குறைவாக இருந் திருத்தல் வேண்டும்.

அந்த விலங்குக்கு "ஓரியோபிதிக்கஸ்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அது மனித இனம் தோன்றுவதற் குக் காரணமாயுள்ள விலங்கு.

இந்த எலும்புக் கூட்டால் தெரியவரும் ஓர் உண்மை என்ன? ஒரு கோடியே இருபது லட்சம் ஆண்டு களுக்கு முன்பே மனித இயல்கள் உள்ள விலங்குகள் இருந்தன என்பது டாக்டர் ஸ்டிராஸின் கருத்து. மனித இயல்கள் உள்ள விலங்குகள் தோன்றியிருக்கக் கூடிய காலம் என்று இதுவரை எண்ணிய காலத்துக்கு இது ஒரு கோடியே பத்து லட்சம் ஆண்டுகளுக்கும் அதிகம்.

# காப்பி

தோட்டப் பயிர்களில் முக்கியமானவற்றுள் ஒன்று காப்பி. இந்தியாவில் சுமார் இரண்டரை லட்சம் ஏகரா நிலப்பரப்பில் காப்பி பயிராகிறது. இந்தியாவில் பயிராகும் காப்பியில் இரு வகை உண்டு; ஒன்று அராபிக்கா, மற்ருென்று ரோபஸ்ட்டா.

நம் நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 43 ஆயிரம் டன் காப்பி தயாராகிறது; இவற்றில் மூன்றில் இரண்டு பங்கு அராபிக்கா ரகம்; ஒரு பங்கு ரோபஸ்ட்டா ரகம்.

காப்பிச் செடியிலிருந்து காப்பிக் கொட்டை கிடைப்பதற்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும், ஒரு காப்பிச் செடியிலிருந்து அரைப் பவுண்டு முதல் ஒரு பவுண்டு வரை காப்பிக்கொட்டை கிடைக்கும்.

காப்பிக் கொட்டையைப் பக்குவப்படுத்துவதில் இரு முறைகளைக் கையாளுகின்றனர்.

மிகவும் பழுத்த சிவந்த பழம் அல்லது "செரி" தோலை உரித்து, புளிக்க வைத்து, நன்ருகச் சுத்தம் செய்து உலர்த்துகின்றனர். இதற்குப் "பார்ச்மெண்ட்" அல்லது "பிளான்டேஷன் காப்பி" என்று பெயர். இது ஒரு முறை.

பழங்களின் தோலை உரிப்பதற்கு முன்னுல் உலர்த்துகின்றனர்; இதற்குச் "செரிக் காப்பி" என்று பெயர். இது மற்ருெரு முறை.

"பார்ச்மெண்ட் காப்பி" "செரிக் காப்பி"யைவிடத் தரத்திலும் விலையிலும் சிறிது உயர்ந்தது.

கலப்படம் செய்யப்பெற்ற காப்பித்தூளைக் கண்டு பிடிப்பதற்குப் பல ரசாயன முறைகள் இருக்கின்றன. மைசூர் உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தில் எளிய முறை யொன்றைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இம்முறைப்படி கால் கரண்டி அளவு காப்பித் தூளை ஒருகோப்பைத் தண்ணீரில் கொதிக்க வைக்க வேண்டும். அந்தத் தூள் அடியில் உறைந்தவுடன் தண்ணீரை வடிக்கவேண்டும். பின்னர் அத்தூளை உலர்த்த வேண்டும். பிறகு ஒவ்வொரு தூளும் தனித் தனியாக இருக்கும் விதத்தில், சிறு துவாரங்கள் நிறைந்த வெள்ளைக் காகிதத்தில் பரப்பி வைக்க வேண்டும். அதன் மீது இரண்டு சதவிகிதம் காஸ்டிக் சோடா கலந்த தண்ணீரை ஊற்ற வேண்டும். அந்தத் தூள்களில் புளியங்கொட்டை அல்லது பேரீச்சம்பழக் கொட்டைத்தூள்கள் கலந்திருந்தால் அந்தக் காகிதத்தின் மீது நிறையச் சிவப்புப் புள்ளிகள் தோன்றும்.

காப்பிக் கொட்டையைச் சரியானபடி வறுத்தால்தான் காப்பிக்குரிய மணம் உண்டாகும். காப்பிக்கொட்டை கருகாமலும் இருந்தால்தான் சிறந்த காப்பி தயாரிக்க முடியும்.

காப்பிக்கொட்டையில் காணப் பெறும் சுமார் முப்பது ரசாயனங்களின் காரணமாகத்தான் அது மணம் வீசுகிறது. செயற்கை முறையில் இத்தகைய மணத்தை உண்டாக்குவது சாத்தியமல்ல.

ஒரு கோப்பைக் காப்பியில் ஒரு மில்லி கிராம் அளவு நயாஸின் இருக்கிறது. அது நமக்குத்தேவையுள்ள விட்டமின். நயாஸினைவிடக் குறைந்த அளவில் வேறு சில விட்டமின்களும் காப்பியில் உள்ளன.

# ஹாலந்தில் விவசாயம்

ஹாலந்தின் குறுக்கே வடகிழக்கிலிருந்து தென்மேற்காக ஒரு கோடு போட்டால், அந்தக் கோட்டின் மேற்குப் பக்கத்தில் உள்ள நிலப் பகுதி அத்தனையும் கடல் மட்டத்துக்குக் கீழே உள்ளவை. இந்தப் பகுதியில் கடல் நீர் புகாமல் அணை கட்டிக் காக்கிறார்கள். நாட்டின் உட்பகுதியில் உள்ள மிகுதியான நீரை, பம்புகள் மூலமாகவும் வடிகால் மூலமாகவும் வெளியேற்றுகிறார்கள். ரைன், மாஸ், ஷெலெட் போன்ற நதிகளின் 'டெல்டா'ப் பிரதேசங்களும் இருக்கின்றன. டெல்டாப் பிரதேசம் வழியாகக் கடல் நீர் உட்புகுந்து, விளைச்சல் நிலம் முழுவதும் உப்பு மூடிப் போகக்கூடிய ஆபத்து அங்கே உண்டு. மழைக் காலத்தில் மிகுதியான தண்ணீரினால் ஏற்படக்கூடிய பிரச்னை வேறு இருக்கிறது. அதே சமயத்தில், கடல் மட்டத்துக்கு உயரே உள்ள பகுதிகளில், மழை குறைவாகப் பெய்யும்போது, தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படக்கூடிய வாய்ப்பும் உண்டு. என்றாலும், இப்போது நிறைவேறி வரும் 'டெல்டாத் திட்டம்' முடிவடைந்துவிட்டால், விளைச்சல் நிலத்துக்கு உப்பு நீரால் ஏற்படக்கூடிய ஆபத்து நீங்கிவிடும்; சுற்றிலுமுள்ள மணற்பாங்கான ஜில்லாக்களில் புதிய தண்ணீர் கிடைக்கவும் வசதி ஏற்படும்.

மக்கள் மிக நெருக்கமாகவுள்ள இந்த நாட்டில், விளை நிலத்தை நன்கு பாதுகாப்பது, தண்ணீர்ப் பிரச்னைக்கு முறையானதொரு தீர்வு காண்பது, பயிர் விளைவதற்கேற்ற நல்ல சீதோஷ்ண நிலை இந்த மூன்றும்தான் விவசாய உற்பத்திக்கான தேவைகளாகும்.

வெயிலற்ற கோடை, குளிர் குறைந்த குளிர் காலம் ஆகியவையே அந்த நாட்டில் உண்டு. புல் தரை விவசாயத்துக்கு அவை மிகவும் ஏற்ற நிலையாகும். அங்கே ஆண்டுடுக்கு சுமார் 30 அங்குலம் மழை பெய்கிறது; சராசரி 1585 மணி நேரம் வெயில் காய்கிறது.

ஹாலந்து, உலகிலேயே மக்கள் நெருக்கம் மிகவும் அதிகமாகவுள்ள நாடாகும். அங்கே, 100 ஏகரா விளை நிலத்துக்கு 192 பேர் வசிக்கிறார்கள். இதே அளவு விளை நிலப் பரப்புக்கு, மேற்கு ஜெர்மனியில் 147 பேர்; பிரிட்டனில் 106 பேர்; பிரான்ஸில் 45 பேர்; அமெரிக்காவில் 15 பேர். நாட்டின் மக்கள் நெருக்கம் மிகுந்து, விளை நிலமும் குறையிருப்பதால் கருத்துடன் பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. நிலப்பரப்புக் குறைவாயிருப்பதால், மக்களுக்குத் தொழில் துறையில் அதிக வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. விளை நிலத்தின் அளவு மிகவும் குறைவாயிருப்பதால் அரசாங்கம் விவசாயச் சட்டங்களை இயற்றியிருக்கிறது. நிலத்தின் விலை அதிகமாக ஏறாமலிருப்பதற்கும், விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கும் அவை வழி செய்கின்றன. நாட்டின் மக்களுக்கும், விவசாயப் பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் ஏற்றுமதி செய்வோர்க்கும் இது மிகவும் முக்கியமாகும்.

கடலிலிருந்து மீட்கப்பெறும் நிலம், இந்தப் பிரச்னைக்கொரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தலாம். ஆனால் நிலைமை அப்படியில்லை. பெருகிவரும் மக்கள் தொகையே அதற்குக் காரணம். இப்போது ஒரு கோடியே 10 லட்சமாகவுள்ள ஜனத்தொகை, 1981ஆம் ஆண்டில் ஒரு கோடியே 34 லட்சமாகப் பெருகிவிடும்.

மக்கள் தொகை மிகுந்து வருவதோடு, விளை நிலமும் அளவில் குறைந்து வருகிறது. நகர விஸ்தரிப்பு, விளை யாட்டு மைதானங்கள், சாலை அமைப்பு ஆகியவற்றால் விளை நிலப் பரப்பு குறைந்து வருகிறது. கடலிலிருந்து மீட்கப்பெறும் நிலத்தின் அளவைவிட இந்த வகையி லான நஷ்டமே அதிகமாகும்.

• மக்கள் பெருக்கமும், நிலப்பரப்பின் சுருக்கமும் சேர்ந்து விளை பொருள் உற்பத்தியின் அளவை அதிகப் படுத்தியிருக்கின்றன.

கிடைக்கக்கூடிய எந்தத் துண்டு நிலத்தையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முயற்சியின் விளைவாக, விவசாய உற்பத்தியில் விசேஷத் தேர்ச்சியும் சிறந்த அறிவும் ஏற்பட்டிருக்கிறது. தோட்ட வேலையில் இந்த அறிவு மிகச் சிறந்து விளங்குகிறது. உதாரணமாக மிகச் சிறிய அளவு நிலத்தில் 'லிலாக்' மலரை வளர்த்தா லும் போதும், ஒரு குடும்பத்துக்கு வேண்டிய வருமானம் கிடைக்கும்.

நாட்டில் மொத்தம் ஒரு லட்சத்து எண்பத்தாறாயிரம் விவாசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அவற்றுள் 50,000 பண்ணைகள் 2 முதல் 12 ஏகரா கொண்டவை. 75 ஏகராவுக்கும் அதிகமாகக் கொண்டவை 10,000 ஆகும். சாதாரணமாக 27 ஏகரா கொண்டவைதான் விவசாயப் பண்ணைகள். சிறிய குடும்பப் பண்ணைகளில், வருமானத் தின் பெரும் பகுதி பால், பன்றி, முட்டை மூலமாகக் கிடைக்கும். பண்ணை நிலத்திலிருந்து கிடைக்கும் பண் டங்கள் பொதுவாக வீட்டுப் பிராணிகளின் தீனிக்கென்று ஒதுக்கப்பெறும். கூலிபெறும் குடியானவர்கள் யாரும் இல்லை. குடும்பத் தலைவியின் உதவியுடன் தலைவனே

பண்ணை வேலைகளைப் பார்த்துக்கொள்வான். மனைவி கால்நடைகளையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்வாள். குழந்தைகளும் உதவி புரிவதுண்டு.

கடந்த சில ஆண்டுகளாக, சிறு பண்ணைகளில் யந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குகின்றனர். ஆள் பலத்தைக் குறைத்து யந்திரங்களைப் பயன்படுத்துவதை அதிகப்படுத்துவதனால் உற்பத்தியைப் பெருக்கலாம். நிலத்தின் அமைப்புகளை மாற்றி, இயன்ற இடங்களில் நிலப் பரப்பை விஸ்தரிக்க வகை செய்கிறார்கள்; பாசன வசதியைப் பலப்படுத்தி, சாலைகளைச் செப்பனிடவும். சேரிகளைத் துப்புரவு செய்யவும், நாட்டின் அழகைக் காப்பாற்றவும் முயல்கின்றனர்.

கால்நடைகளை வளர்ப்பது, விவசாயத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். நாட்டில் கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 30 லட்சமாகும். அதாவது 100 ஏகராப் புல்வெளிக்கு 46 பசுக்கள். ஆண்டொன்று 58 லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அதில் 3.75 சதவிகிதம் கொழுப்புச் சத்துண்டு. இந்தப் பாலில் 60 சதவிகிதம் உள்நாட்டில் செலவாகிறது. மீதியை, பால் பண்டங்களாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் எடுத்த கணக்கின்படி 2 லட்சம் குதிரைகளும், 25 லட்சம் பன்றிகளும், 5 லட்சம் ஆடுகளும், மூன்றரைக் கோடி கோழிகளும், 6 லட்சம் வாத்துக்களும் இருந்தன.

கால்நடைகளின் சுகாதார விஷயத்திலும் அதிக கவனம் செலுத்துகின்றனர். எந்த ஓர் உயிரும் காசநோய் பற்றாமல் காப்பாற்றப்பெறுகிறது. கருச் சிதைவு தொற்று

நோயாகப் பரவாமல் இருப்பதற்கு வேண்டியவற்றைச் செய்கிறுர்கள். ஒவ்வோராண்டிலும், காலிலும் வாயிலும் நோய் தோன்ருமல் இருப்பதற்காக ஒவ்வொரு கால் நடைக்கும் தடுப்பு ஊசி போடுகிருர்கள்.

கால்நடை வளர்ப்பவர்களில் பாதிப்பேர், செயற்கைக் கருத்தரிப்புக்கான சங்கம் ஒன்றில் உறுப்பினர். செயற்கை முறையில் கருத்தரித்த பசுக்களின் எண்ணிக்கை சுமார் பத்து லட்சம்.

உணவுப் பொருள்கள், தீவனத் தானியங்கள், எண்ணெய், கொழுப்புத் தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் முதலியவற்றையும், விளை நிலம் மிகுதியாகவுள்ள நாடுகளில் உற்பத்தியான விவசாயப் பண்டங்களையும் ஹாலந்து பெருவாரியாக இறக்குமதி செய்கிறது.

பால், பண்டங்கள், முட்டை, இறைச்சிப் பொருள்கள், பழ வகைகள், பச்சைக் காய்கறிகள், உருளைக் கிழங்கு, மின்சார பல்புகள், பூக்கள் முதலியவற்றை அந்த நாடு ஏற்றுமதி செய்கிறது. விசேஷப் பயிற்சி, தேர்ச்சி ஆகியவற்றின் காரணமாக விவசாய உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்ய முடிகிறது.

ஹாலந்து நாட்டின் விவசாயத்தை, எண்ணெய் சுத்தித் தொழிலுக்கு ஒப்பிடலாம். மலிவான கச்சாப் பொருள்களை இறக்குமதி செய்து, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளில் தயாரான விலை மிகுந்த பண்ணைப் பொருள்கள், உணவுப் பண்டங்கள் முதலியவற்றை ஏற்றுமதி செய்கிறது. ஐரோப்பாவில், கடந்த நூற்ருண்டின் இறுதியில் விவசாயத் துறையில்

ஏற்பட்ட நெருக்கடியே இதற்கு வழி செய்தது. அந்த நெருக்கடியின்போது, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ருஷ்யா போன்ற நாடுகளிலிருந்து தானியங்கள் ஐரோப் பாவில் வந்து குவிந்து விட்டன. மற்ற நாடுகள் தமது விவசாயத்தைப் பாதுகாத்துக் கொள்ள முனைந்தபோது, ஹாலந்து மட்டும் இந்தத் தானியத்தைத் தயாரான பண்டங்களாக உருவாக்கி சுற்றிலுமுள்ள நாடுகளின் தொழில் பிரதேசங்களில் விற்றது.

விவசாயப் பண்டங்களின் ஏற்றுமதி மூலம் கிடைக் கும் தொகை, தீவனம் முதலியவற்றை இறக்குமதி செய் வதற்கு மட்டுமின்றி, வெளிநாடுகளிலான கடனுக்கு ஈடாக வழங்கவும் உதவுகிறது.

சுருக்கமாகக் கூறினல், கடல் சூழ்ந்த தனது நாட் டின் உயர்வுக்காகவும் தனது வாழ்க்கைத்தர உயர்வுக் காகவும், டச்சு நாட்டு விவசாயி கடினமாக உழைத்திருக் கிருன், சொந்த முயற்சி, கல்வி, ஆராய்ச்சி முதலியவற் றின் அடிப்படையில் அவன் மேற்கொண்ட முயற்சி நல்ல பலனளித்திருக்கிறது.

**டச்சு நாட்டுப் பசுக்கள்**

ஹாலந்து தேசத்தில் கால்நடைக் காட்சி ஒன்று சமீ பத்தில் நடைபெற்றது. நாட்டின் மிகச் சிறந்த கால்நடை களை வளர்ப்பதிலும், அவற்றின் தரத்தை உயர்த்துவதி லும் கால்நடைத் தர உயர்வு சங்கம் பெருந்தொண்டு புரிந்திருக்கின்றது. கால்நடைகளைப் பொறுத்தவரை ஹாலந்து பெற்றுள்ள உலகப் பெரும் புகழுக்கே அந்தச் சங்கம்தான் காரணம்,

முன்னாளில், நாட்டின் கால்நடையில் பல்வேறு நிறங்களும் வகைகளும் இருந்து வந்தன. எவ்வளவோ முயன்று பார்த்தும் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இந்த நிலைமையே இருந்து வந்தது. 1874ஆம் ஆண்டில் கால்நடைப் பராமரிப்பாளர் பலர் ஹாலந்து கால்நடைத் தர உயர்வுச் சங்கத்தில் சேர்ந்தார்கள். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு பிரீஸ்லாந்திலும் இது போன்றதொரு சங்கம் உருவாகியது. இப்போது நாட்டில் கறுப்பு-வெள்ளை, கபிலை-வெள்ளை, கறுப்பு என்ற மூவகைகள்தான் கால்நடைகளில் உண்டு.

உலகில், பசுக்கள் மிக அதிகமான அளவில் பால்தரும் நாடுகள் ஹாலந்தும் இஸ்ரேலும்தான். இந்த நிலைக்கும் கால்நடைத் தர உயர்வுச் சங்கத்தின் அயரா உழைப்புத்தான் காரணம். சோதனை செய்து பார்த்த பசுக்களில் பசுவொன்று, ஓர் ஆண்டுக்கு 9,460 பவுண்டு பால் தருகிறது. இதில் 3·8 சதவிகிதம் கொழுப்புச் சத்துண்டு. சராசரியாக, அந்த நாட்டுப் பசுக்கள், தலைக்கு, 3·75 சதவிகிதம் கொழுப்புச் சத்துள்ள 8,800 பவுண்டு பால் தருகின்றன. அந்தச் சங்கங்களில் பதிவு செய்யப்பெற்று பசுக்கள், உண்மையிலேயே அதிகமாகப் பாலைத் தருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக, செயற்கைக் கருத்தரிப்பு முறை அமுலில் இருந்து வருகிறது. அதன் விளைவாக, பாலில் கொழுப்புச் சத்தோடு, அல்புமென் அம்சமும் அதிகமாகக் காணப்படுகிறது.

கால்நடை வளர்ப்பு என்பது விஞ்ஞான அடிப்படையிலமைந்த வியாபாரமாகிவிட்டது. கால்நடைகளின்

இரத்தப் பரிசோதனை, கூட்டுச் சேரும் கால்நடையின் தரம், சம நிலை முதலியவற்றை யெல்லாம் கவனிக்கிறார் கள். கிராமப் புறங்களில் உள்ள இளைஞர் கழகங்களின் முயற்சியால் பெருவாரியான இளம் விவசாயிகள் கால் நடைப் பராமரிப்பில் கவனம் செலுத்தி வருகிறார்கள். உருளைக் கிழங்குப் பயிர் முதலாகக் கால்நடை வளர்ப்பு வரை, பலவற்றிலும் போட்டிகளுக்கும் சிறந்தவர் களுக்குப் பரிசளிப்பதற்கும் ஏற்பாடு செய்து வருகிறார் கள்.

கால்நடைக் காட்சி-தேர்வு என்பது கிராமப்புற இளை ஞர்களிடையே பெரும் மதிப்புப் பெற்றிருக்கிறது. ஒவ் வோராண்டிலும், நூற்றுக் கணக்கான கால்நடைக் கண் காட்சி அல்லது பிராந்தியக் கால்நடைக் காட்சிகளைக் காணலாம். இந்தக் காட்சி இரண்டு கட்டங்களில் நடை பெறுகிறது; முதலில், காட்சிக்கு வந்துள்ள எல்லாவற்றி லும் சிறந்த ஐந்தை, வரிசைப்படி, ஒரு நமூனவில் ஒவ் வொன்றைப் பற்றிய குறிப்புக்களுடன் எழுதிக் கொள் வார்கள். மிகச் சிறந்த கால்நடைகளை வளர்த்த மாண வர்கள்-பொதுவாக இவர்கள் மொத்தக் கூட்டத்தில் மூன்றிலொரு பகுதியினராக இருப்பார்கள்.—மீண்டும் கால்நடைக் காட்சியைச் சுற்றிப் பார்ப்பார்கள். ஒவ் வொரு மாணவனும் ஒலிபெருக்கியின் உதவி கொண்டு, ஒவ்வொரு கால்நடையையும் வருணித்துக் கொண்டு செல் வான். இறுதியாக, நீதிபதிகள் திறமை மிகுந்தவர்களுக் குப் பரிசு வழங்குவார்கள்.

விவசாயம் புது முறைகளில் வளர்வதற்கு, வயது முதிர்ந்தவர்களின் அநுபவ ஞானத்தைப்போல, இளை ஞர்களின் ஆர்வமும் மிகவும் அவசியமாகும்.

## பெரிய கோழிப் பண்ணை

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய கோழிப் பண்ணை ஹாலந்தில் வெல்ட் என்னுமிடத்தில் அமைந்திருக்கிறது என்பதைச் சிலரே அறிவார்கள். அங்கே ஒவ்வோராண்டும் சுமார் 30 லட்சம் பறவைகளும், 10 கோடி முட்டைகளும் விற்பனையாகின்றன.

ஹாலந்து 250 கோடி முட்டைகளை ஏற்றுமதி செய்து, முட்டை ஏற்றுமதியில் உலகிலேயே தலைசிறந்து விளங்குகிறது.

## உப்புக் கரைத்த நீர்

கடுமையாகக் காயம் ஏற்பட்டால் அதிர்ச்சி உண் டாகிறது. உடனே அதனைக் கவனிக்காவிட்டால் சில மணி நேரத்தில் உயிருக்கு ஆபத்து நேரலாம். ஒரு காயம் ஏற்பட்டு 48 மணி நேரம் அத்தகைய அதிர்ச்சி நிலை இருக்கும். அந்த அதிர்ச்சியைப் போக்குவது மருத்துவக் கலையின் சிக்கலான பிரச்னைகளுள் ஒன்று.

விலங்குகளைக் கொண்டும் மனிதர்களைக்கொண்டும் கூட வைத்திய நிபுணர்கள் சோதனைகள் நடத்தினர். தீப்புண்ணால் ஏற்படும் அதிர்ச்சிக்கு உப்புக் கரைத்த நீர் மருந்தாகும் என்பது அவர்கள் கூற்று.

தீ விபத்து, வெள்ளம் அணுகுண்டு வெடிப்பு முதலியவை ஏற்படும்போது, அதிர்ச்சிக்குச் சாதாரணமாகக் கொடுக்கும் பிளாஸ்மாவும் இரத்தமும் கிடைப்பது அரிது. எனவே, நீரில் உப்பைக் கரைத்துக்கொடுப்பதே எளிய முறை.

சென்ற ஐம்பது ஆண்டுகளாக உப்புக் கரைத்த நீரை மருத்துவர் அதிர்ச்சி நீக்க மருந்தாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். எனினும், அதன் ஆற்றல் பற்றிய ஐயப்பாடு இருந்து வந்தது. சென்ற ஏழு ஆண்டுகளாகச் செய்யப்பெற்ற ஆராய்ச்சி தீப்புண் மருத்துவத்தில் உப்பு நீரின் பயன் குறித்துச் சிறிதும் ஐயம் கொள்ள வேண்டியதில்லை என்பதை உள்ளங்கை நெல்லிக் கனியெனக் காட்டிவிட்டது.

## உப்பு நீரும் இரத்தமும்

பிளாஸ்மாவுக்கும் முழு இரத்தத்துக்கும் உள்ள சக்தி அதே அளவுள்ள உப்புக் கரைத்த தண்ணீருக்கு இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர்.

சில நோயாளிகளுக்கு உப்புக் கரைத்த நீர் மட்டும் கொடுத்தனர். வேறு சில நோயாளிகளுக்கு பிளாஸ்மாவும் குளுக்கோஸ் கலந்து தண்ணீரும் கொடுத்தார்கள். அக்காலத்தில் பிளாஸ்மா அதிகமாகக் கிடைக்காத பெரு நாட்டின் தலைநகரமான லீமாவில் உப்புக் கரைத்த தண்ணீர் கொடுத்துச் சோதனை நடத்தினார்கள்.

அந்நகரில் சமைப்பதற்கும் சூடு உண்டாக்குவதற்கும் பழங்காலத்து அடுப்புகளில் மண் எண்ணெய் உபயோகித்தனர். அதனால் பிள்ளைகளும் பெரியவர்களும் தீ விபத்துக்கு ஆளானார்கள். நோயாளிகளுக்குக் கொடுக்க பிளாஸ்மாவும் இரத்தமும் இல்லாததால் அதிர்ச்சியால் பலர் உயிர் துறந்தனர்.

உடலில் பத்து சதவிகிதத்துக்கு அதிகமாகத் தீப்புண்கள் உள்ள நோயாளிகளைக் கொண்டே சோதனைகள் நடத்தினர். சிலருக்கு உப்பு நீரும், வேறு சிலருக்கு பிளாஸ்மாவும் குளுகோஸும் தண்ணீரில் கொடுத்தனர்.

உப்பு கொடுக்கப்பெற்ற பெரியவர்கள் 79 பேர்களில் ஒருவரும் அதிர்ச்சியால் உயிர் துறக்கவில்லை. அவர்களில் உடலில் பாதி இடங்களில் தீப்புண் உள்ளவர்களும் இருந்தார்கள்.

பிளாஸ்மா கொடுக்கப்பெற்ற பெரியவர்கள் 74 பேர்களில் அதிர்ச்சியால் 12 பேர் இறந்தனர். தீப்புண்ணுள்ள

123 குழந்தைகளில் 20 சதவிகிதத்தினர் உப்பு நீர் கொடுக்கப் பெற்றாலும் பிளாஸ்மா கொடுக்கப்பெற்றாலும் உயிர் நீத்தனர். பிளாஸ்மாவோடு உப்பு நீரும் சேர்த்துக் கொடுத்தபோது 9 சதவிகிதப் பிள்ளைகள் மட்டும் அதிர்ச் சியால் இறந்தார்கள்.

ஆராய்ச்சி இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. வேறு வகைப் புண்களுக்கும் உப்புக் கரைத்த தண்ணீரைக் கொடுத்துச் சோதனை நடத்துகிறார்கள். மிருகங்களைக்கொண்டு அந்தச் சோதனை நடைபெறுகிறது. பெரிய குண்டு வீச்சால் ஏற்படும் தீப்புண் அதிர்ச்சிக்கு உப்புக்கரைத்த நீரைக் கொடுப்பதை அவசர மருத்துவ முறையாகக் கையாளலாம்.

உப்புக் கரைத்த நீர் தயாரிக்கும் முறை மிகவும் எளிதானது: ஒரு பெரிய கரண்டி நிறைய தூய உப்பும், அரைக்கரண்டி சோடாவும் எடுத்து, ஒரு குவார்ட் அளவுள்ள தண்ணீரில் கலக்கவேண்டும். எடையில் ஒவ்வொரு 20 ராத்தலுக்கும் ஒரு குவார்ட் சேர்த்துக் கொடுக்க வேண்டும். முதல் 24 மணி நேரம் இந்த அளவு கொடுக்க வேண்டும். அடுத்த 24 மணி நேரம் இந்த அளவில் பாதி கொடுக்க வேண்டும்.

# எல்லோரும் ஓர் குலம்

## அர்னல்டு டொயின்பி

(மௌலானா அபுல்கலாம் ஆசாத் நினைவுச்சொற்பொழிவுகள் சென்ற ஆண்டு முதல், ஆண்டுதோறும் டில்லியில் நடைபெறுகின்றன. சென்ற ஆண்டில் பிரதமர் ஜவஹர்லால் நேரு சொற்பொழிவு ஆற்றினர். இவ்வாண்டில் பிரபல சரித்திரப் பேராசிரியர் அர்னல்டு டொயின்பி மூன்று சொற்பொழிவுகள் ஆற்றினர். அவற்றின் சுருக்கம் இது.)

சமீபகாலம் வரை இந்தியாவை ஆண்டு வந்ததும், மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஜவஹர்லால் நேரு முதலியோரைச் சிறையிட்டதுமான பிரிட்டனைச் சேர்ந்த என்னை, இந்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்துமாறு அழைத்துள்ளீர்கள். இது இந்தியர்களுக்கே இயற்கையாக அமைந்துள்ள குணத்தைக் காட்டுகிறது.

மனித குலத்தை எதிர்நோக்கி நிற்கும் புதிய அபாயம்—அதாவது நமது கைகளாலேயே நம்மை நாமே அழித்துக்கொள்ளக்கூடிய அபாயம்—நம்மிடையே புதியதொரு உணர்ச்சியை—அதாவது மனித குலம் முழுதும் ஒன்று, யாவரும் கேளிர் என்ற மனித குல பக்தியை உண்டாக்க வேண்டும். இனப்பற்று, தேச பக்தி முதலியவற்றைக் காட்டிலும் மனித குல பக்தி நமது இதயத்திலும் மனத்திலும் முதலிடம் பெறவேண்டும்.

இந்த அணுயுகத்தில் நமது அரசியல் தலைவர்களுக்குத் தேவைப்படும் அரசியல் விவேகம், நிச்சயமாக அசோகனின் விவேகமேயாகும். ஒற்றுமை இல்லாமல் இனி ஒருபோதும் நம்மால் வாழ முடியாது. இன்றியமையாத இந்த ஒற்றுமையை உண்டாக்குவதற்குப் பிறரை கட்டாயப் படுத்தும் முறையை இனியும் நாம் ஒருபோதும் கையாள முடியாது. மனித குலத்தை ஒன்றுபடுத்த நமது நாளில் நாம் கையாளக்கூடிய ஒரே வழி மனமாற்றம் தான். பிறரைக் கட்டாயப்படுத்துவது அன்று. அணுயுகத்தில் நாம் பலத்தை உபயோகித்தால் அதனால் ஒற்றுமை உண்டாகாது; ஆனால் அதன் பயனாக அடியோடு அழிந்து போவோம். இந்த யுகத்தில், பயமும் நமது மனச்சாட்சியும் அசோகருடைய வழியையே பின்பற்றும்படி கூறுகின்றன. ஆனால் அசோகர் தனது மனச்சாட்சியின்படி நடப்பதற்காக மட்டுமே அந்த வழியைப் பின்பற்றினர்.

அந்த நாளிலிருந்து இன்று வரை மனித குலத்துக்கு பூண்டோடு அழிந்து போகக்கூடிய இத்தகைய அபாயம் தோன்றியதில்லை. மனிதன் கற்களை ஆயுதங்களாக உபயோகித்த நாளிலிருந்து நமது முன்னோர்கள், இந்த உலகில் கிருமிகளைத் தவிர, மனிதரல்லாத மற்றவையனைத்தையும் நிரந்தரமாக வென்றனர். மனிதரல்லாத பிற உயிர்கள்—சிங்கம், புலி ஏன் கிருமிகளும் விஷ ஜந்துக்களும்கூட—இந்நாளில் மனிதன் தனக்குத்தானே அபாயமாய் இருப்பதைப்போல, என்றுமே இவ்வளவு அபாயமாய் இருந்ததில்லை. மனிதன் இப்பொழுது கிருமிகளைக் கூட வென்றுவிட்டான்; ஆனால் தன்னைத்தான் வெல்லவில்லை. மனிதன் இப்பொழுது தன்னிடம் வைத்திருக்கும் அழிவு ஆயுதங்களுடன் ஒப்பிடும்பொழுது, புலிகளும் கிருமிகளும் மிக்க அற்பமேயாகும்.

இந்த அபாய நிலைமையில் மனித குலத்துக்கு மிகவும் தேவை, முக்கியமான திருந்தியமையும் மனப்பான்மையேயாகும். இதை உலகிற்கு வழங்கியது இந்தியாதான் என்று பிற்காலத்தில் சரித்திர ஆசிரியர்கள் கூறுவார்கள் என்று நம்புகிறேன்.

அரசியல் அறிவுள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும், இந்த அணுயுகத்தில் போரை நாம் இப்போது ஒழிக்காது போனுல், போர் நம்மை ஒழித்துவிடும் என்பது மிகத் தெளிவாகத் தெரியும்.

போர் என்பது மிகப் பழங்காலத்திலிருந்து இருந்து வருவது. அதனை நாம் ஒழித்துவிடுவதில் வெற்றிபெறுவோம் என்றே நம்புகிறேன். அடிமைத்தனத்தை ஒழிப்பதைவிடப் போரை ஒழிப்பது மிக்கக் கடினமானது. அடிமைத்தனமும், போரைப் போலவே பழங்காலத்திலிருந்து வேரூன்றிய கொடுமையேயாகும். சிறிது காலத்துக்கு முன்புதான் அடிமைத்தனத்தை ஒழிப்பதில் வெற்றி பெற்ருேம்.

மனித குலம் ஏற்கனவே பலமுறை தனக்கு ஏற்பட்ட அபாயத்திலிருந்து கடைசி நேரத்தில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. செங்குத்தான ஒரு சரிவில் நின்று கொண்டு நாட்டியமாடுவது பைத்தியக்காரத்தனமாகும்; அழிவு முனைக்குச் செல்லுமுன் அதனை நிறுத்துவதுதான் நமது பகுத்தறிவுடைய செயலாகும்.

போரை ஒழிப்பதற்கு, உலக அரசாங்கம் ஒன்றை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்படும்; அதோடு அதற்குப் போதிய அதிகாரமும் வேண்டும். அத்தகைய ஸ்தாபனம்தான் அணுவின் உற்பத்தியையும் உபயோகத்தையும் கட்டுப்படுத்த முடியும்.

ஜனப் பெருக்கத்தை, மனித சமூகத்தின் தேவைக்கும் கருத்துக்கும் ஏற்றவாறு கட்டுப்படுத்தும் சக்தி சமீப காலம்வரை மனித சமுதாயத்துக்கு இருந்ததில்லை. மனித இனத்தின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இயற்கை உபயோகித்த பயங்கர ஆயுதங்கள் மூன்று. அவை பஞ்சம், பிணி, போர் ஆகியவை. மனிதன் நாளாவட்டத்தில் பஞ்சம், பிணி ஆகிய இரண்டையும் ஓரளவு வென்று வென்றுவிட்டான். ஆனால், மனிதன் தானே செய்த ஆயுதமான போரை மட்டும் இயற்கைக்குப் பரிசாக அளித்திருக்கிறான்.

மனிதன் கற்களை ஆயுதங்களாக உபயோகித்த காலத்தில் நம்மைச் சிங்கத்துக்கும்புலிக்கும் இரையாகக்கொடுப்பதினின்று இயற்கையைத் தடுத்து விட்டோம். நமது காலத்தில், நம்மைக் கிருமிகளுக்குப் பலி கொடுக்காதபடியும் இயற்கையைத் தடுத்துவிட்டோம். ஆனால் இயற்கை செய்ய வேண்டிய காரியத்தை நன்றியுணர்வுடன், இயற்கை செய்யக்கூடியதைவிட அதிகத் திறமையுடனும் நாம் செய்து வருகிறோம். நாமே உண்டாக்கிக் கொண்ட போர்த் தொழிலை இன்னும் விட்டபாடில்லை.

மனிதன் பிணிகளால் உண்டாகும் அகால மரணத்தைப் பெரும்பாலும் தடுத்துவிட்டான். அத்துடன், போரை ஒழிப்பதன் மூலம், போரினால், மனித இனத்தைப் பொறுத்த வரையில், பிறப்பையும் இறப்பையும் சமப்படுத்தும் இயற்கையின் நிலை பெரிதும் தடுமாற்றமடைந்துவிடும்.

உலகத்தின் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தும் இயற்கை முறைக்குப் பதிலாகச் செயற்கை முறையைக் கொண்டுவந்து, அதில் நாம் ஓரளவு வெற்றிபெற்றுள்

ளோம். இதன் காரணமாக நம்மை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்று முடிவு செய்ய வேண்டும். இதனை நாம் தவிர்க்க முடியாது.

இயற்கையின்மீது நாம் முழு வெற்றியும் பெறவேண்டு மானல், பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இறப்பு விகிதம் எவ்வளவோ அதற்குச் சமமாகப் பிறப்பு விகிதத்தை கட்டாயமாகக் குறைத்து அளவு படுத்த வேண்டும். மனித முயற்சியினல் தற்பொழுது இறப்பு விகிதம் முன்னிருந்ததைவிட எல்வளவோ குறைந்து விட்டது.

இவ்வாறு நாம் செய்யாமல், இயற்கை நியதியின்படி பிறப்பு விகிதம் இருக்கட்டும் என்று விட்டுவிடுவோ மானல், இயற்கையின்மீது நாம் கொண்டுள்ள ஓரளவு வெற்றி அதிகநாள் நீடிக்காது. ஆனல் ஒன்று மட்டும் உறுதி. தற்பொழுதோ அல்லது பின்னரோ, எந்த முறை களிலுலோ, பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் சமமாகி விடும்.

பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவது என்பது போரை ஒழிப்பதைக் காட்டிலும் மிக்கக் கடினமான காரி யம். அரசாங்கங்களுக்குள் ஒப்பந்தங்கள் செய்து கொள் வதால் இதனைச் செய்ய முடியாது. கோடிக் கணக்கான மக்கள்—கோடிக் கணக்கான கணவன்மார்களும் மனைவி மார்களும் சொந்தமாகத் தாங்களே முடிவு செய்தால் தால் இது நடக்கும்.

கோடிக் கணக்கான மக்களை, அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் வேண்டுமென்று தீர்மானிக்கும்படி, கட்டா யப்படுத்த முடியாது. கல்வி யறிவாலும், தூண்டுதலா லுமே அதைச் செய்யமுடியும். ஆனல் அதற்கு நாளாகும்,

குழந்தைகளின் பிறப்பு விகிதம் இந்த அளவுதான் என்பதை நிர்ணயித்து நடைமுறையில் கொண்டு வருவதில் வெற்றி பெறுவோமானால், புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும்—நாம் நல்லது என்று கருதுகிற—நல்வாழ்க்கை வாழ ஒப்பற்ற வாய்ப்புகளை அளிப்போம் என்று உறுதியாகச் சொல்ல முடியும். தற்பொழுது இயற்கை, புதிதாகப் பிறக்கும் குழந்தைகளை, அனாதைகளைப் போல நடத்தி வருகிறது.

மனித இனம், தனது பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தாமல், இயற்கையின் போக்கில் விட்டு விட்டால், இயற்கை நிச்சயமாக மனிதனை எதிர்க்கும்; அதில் வெற்றியும் பெறும். மனிதனால் முற்றிலும் அகற்ற முடியாத ஓர் கொடிய ஆயுதம் இன்னும் இயற்கையின் கையில் இருக்கிறது. அதுதான் பஞ்சம். இயற்கையின் போக்கில் பிறப்பு விகிதத்தை நாம் விட்டு விட்டோமானால், ஓர் நிலைமை வரும்பொழுது, இயற்கை மீண்டும் பஞ்சத்தை உண்டாக்குவாள். பஞ்சம், பிணியையும் போரையும் மீண்டும் கொண்டுவரும்.

இந்த நிலை ஏற்படுமானால், அணு யுகத்திற்கு முந்திய நாளிலும்கூட இது தாங்க முடியாத தோல்வியாக முடியும். மனித சமூகம் முயல்களையும் மீன்களையும்போலத் தாழ்த்தப்பெற்றுவிடும். ஆனால் இந்த யுகத்தில் அத்தகைய நிலை ஏற்படாது. ஏனென்றால், போர் மூண்டால் பழைய காலத்தைப் போல வில்லும் அம்பும், துப்பாக்கியும், பீரங்கியும் இரா. அணுவினால் மனித இனம் பூண்டோடு அற்றுப்போகும். எனவே நமக்கு முன்னே உள்ள பிரச்னை, பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதா? அல்லது பஞ்சத்தின் காரணமாக நேரும் அணு குண்டுப் போரால் மனித இனத்தையே அழித்து விடுவதா? என்பதேயாகும்.

பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதில் உலகத்தி லுள்ள பிற நாட்டு அரசாங்கங்களைவிட இந்திய அரசாங் கம் அதிகக் கவனம் செலுத்துகிறது. இந்திய மக்களும் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். ஆனல் இது அகில உலக இயக்கமாக ஆகவேண்டும். அத்துடன் நில்லாது விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்காக உலக முழுமைக்கும் ஒரே ஸ்தாபனம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உணவு உற்பத்தியைச் சரியானபடி திட்டமிட்டு வெற்றி கரமாகச் செய்யமுடியும்; உலகத்தில் எந்தப் பகுதியில் உணவு உற்பத்தியானுலும், அதனை உலகத்தின் வேறெந்த பகுதிகளிலுமுள்ள தேவையுள்ள மக்களுக்கு உடனடியாக வழங்கவும் முடியும்.

இவை அரசியல் சம்பந்தமானவை. உணவு உற்பத் தியும் விநியோகமும் தற்பொழுது அந்தந்த நாட்டு அர சாங்கங்களிடம் உள்ளன. இவற்றை சர்வ அதிகார முடைய ஓர் உலகப் பொது ஸ்தாபனத்திடம் ஒப்படைத் தால்தான் உணவுத் திட்டம் வெற்றியடைய முடியும் அத்துடன் அனுவை உற்பத்தி செய்வதும் உபயோகிப்ப தும் உலகப் பொது ஸ்தாபனம் ஒன்றுக்குக் கட்டுப்பட்ட தாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு உலக ஒற்றுமை ஏற்பட வேண்டுமானுல் ஓர் உலகப் பொது அரசாங்கமும் ஏற்படவேண்டும்.

உலக ஒற்றுமை வேண்டும் என்று கூறுவதன் நோக் கங்கள், காரியங்களைத் திறமையாகவும் பயனுடையதாக வும் செய்வதற்கு ஒரு பொது ஸ்தாபனம் வேண்டும் என் பதே. ஆனல், ஒரு ஸ்தாபனம் எவ்வளவுதான் உயர் வாக இருந்தாலும் மக்களை மகத்தான—கஷ்டமான காரி யங்களைச் செய்யும்படி உற்சாகப்படுத்த முடியாது. ஒரு

காரியத்தின் தன்மையை உணர்ந்து செய்யாத வரையிலும் நமக்கு ஆத்மத் திருப்தி ஏற்படாது.

மனித இனத்தைச் சேர்ந்த நாம்—அந்த ஒரு காரணத்தாலேயே—ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மக்களைப் போல வாழ வேண்டும் என்று அறிகிறோம்; அவ்வாறே உணர்கிறோம். இதுதான் சகோதரத்துவத்தின் அடிப்படையான நோக்கம். இந்தச் சகோதர உணர்ச்சி, ஒவ்வொரு மனிதரிடத்தும்—அவர் எந்த நாகரிகத்தில் வளர்ந்தவராக இருந்தாலும்—அவருடனேயே பிறந்திருக்கிறது.

இந்தச் சகோதரத்துவ உணர்ச்சி இந்திய நாட்டில் தொன்று தொட்டே இருந்து வருகிறது. மனிதர்களிடம் மட்டுமல்ல, வாயில்லாப் பிராணிகளிடமும் இந்தச் சகோதரத்துவ உணர்ச்சியைக் கைக்கொண்டனர். உடன் பிறந்த இந்த உணர்ச்சிக்குச் சான்று அசோகரேயாகும். அசோகர் சக்ரவர்த்தியாக இருந்ததோடு, பகுத்தறிவு கூறும் சகோதர உணர்ச்சியை நடைமுறையில் கொணர்ந்ததால் பெரும் புகழடைந்தார். அசோகரை எல்லோரும் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்வார்கள். ஏனென்றால் அவர் அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்கும்பொழுது, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செயலாற்றினர்.

தற்பொழுதுள்ள மனித சமூகத்துக்குத்தான் அழியாமல் இருப்பதற்காகவே—போரை ஒழிக்க வேண்டும் என்ற அவசரத் தேவை ஏற்பட்டிருப்பது வெளிப்படை. ஆனால் இம்மாதிரியான தேவை அசோகருக்கு ஏற்படவில்லை. அப்படியிருந்தும் அசோகர் போரை ஒழிப்பதை ஒரு தேசியக் கொள்கையாகக் கொண்டார். அவர் கையிலிருந்த கொடிய ஆயுதங்களால், தன் நாட்டு மக்

களையே—ஏன் மனித வர்க்கத்தையே, தனக்கு எவ்வித அபாயமுமின்றி அவர் அழித்திருக்க முடியும். சமாதானத்துக்காகவே—பல நாடுகளை வென்றுஅவற்றை ஒன்று படுத்துவதால்உண்டாகும் சமாதானத்துக்காகவே-தான் போரிடுவதாகவும் அவர் கூறிக்கொண்டிருக்கலாம்.

போரை ஒழிப்பதன் மூலம் மனித சமூகத்தை ஒன்று படுத்துவதை அசோகர் புறக்கணிக்கவில்லை. ஒற்றுமையை உண்டாக்குவதற்கு போர் முறைகளைக் கையாளமல் நல்லெண்ணத் தூதர்களையும் சந்நியாசிகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி புத்தரின் போதனைகளைப் பரவச் செய்தார். மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் பிரசாகர்களை அனுப்பினர். பிரசாரகர்களை எங்கெங்கு அனுப்புவது என்பதில் அவர் ஒருவித எல்லையும் வகுத்துக் கொள்ளவில்லை.

அசோகரின் செய்கைகள், மனிதர்களிடம் மட்டும் கருணையுடையதல்ல. அரசர்கள்வேட்டையாடுதலை ஒழித்தார். அரண்மனையில் சைவ உணவே பரிமாற வேண்டும் என்று உத்தரவிட்டார். வருஷத்தில் ஐம்பத்தாறு நாட்களில், மற்ற உயிர்ப்பிராணிகளை யாரும் கொல்லக் கூடாது என்றும், அவ்வாறு செய்தல் சட்ட விரோதம் என்றும் அறிவித்தார்.

இந்த இந்தியப் பண்பாடு நன்கு வேரூன்றி விட்டது. அசோகர் ஆட்சிக்குப்பின்—800 ஆண்டுகளுக்குப் பின்-அரசாண்ட அக்பர் சக்ரவர்த்தியும் இதே மூன்று கொள்கைகளைக் கடைப்பிடித்தார். அக்பர் இவ்வாறு செய்ததற்குக் காரணம் பௌத்தரின் தொடர்பு அன்று; ஒரு சமணரின் தொடர்பேயாகும். மிருகங்கள்மீது சண்டை போடக்கூடாது என்று அக்பர் கூறினரே தவிர, மனி

தர்கள் மீது சண்டைபோடக்கூடாது என்று கூறவில்லை. அசோகரைக்காட்டிலும் அக்பருக்கு இதை நடைமுறையில் கொண்டுவருவது மிக்கக் கடினம் என்பதில் ஐயமில்லை. அசோகர் ஏற்கெனவே ஸ்தாபிதமான ராஜ்யத்துக்குப் பரம்பரை வாரிசாக வந்தார். அக்பரோ, தனது பாட்டனர் ஜெயித்த ராஜ்யத்தைத் தனது தந்தையார் இழக்க, அதனை மீண்டும் ஜயித்து உறுதிப்படுத்தவேண்டிய நிலையில் இருந்தார், அக்பர் போரை ஒழித்திருப்பாரானல், தனது ராஜ்யத்தையும் ஏன்? தனது உயிரையுமே இழந்திருக்கக் கூடும். என்றுலும், விதிவசத்தால் அக்பருக்குப் பதிலாக அதே நிலையில் அசோகர் பிறந்திருந்தாலும், நிச்சயமாகப் போரை ஒழித்திருப்பார் என்று நாம் ஊகிக்கலாம்.

" நாம் எல்லோரும். இன்னும் உருவகமாகாத உலக அரசாங்கத்தின் பிரஜைகள் என்று கூறலாம். மனிதனுடைய சரித்திரத்தைப் பார்க்கும்பொழுது உலகத்திலுள்ள மற்றப் பொருள்களின் மீதுள்ள ஆதிக்கத்தைக் காட்டும் மனிதனுடைய மனத்தின் உயர்வுப்பற்றிய கதையாகவே தோன்றுகிறது. மனிதனிடத்தில் ஒரு துளி தெய்வாம்சம் இருக்கிறது. அதனுல்தான் மனிதன் எதிர்க்க முடியாத பல இன்னல்களை எல்லாம் எதிர்த்துச் சமாளித்து நிற்கின்றுன். தனிப்பட்டவர்களும், தேசங்களும் இன்னல்களுக்கு இரையாகிவிட்டன. ஆனுல் மனிதன் மட்டும் முன்னேறி, தனது விதியை நிர்ணயிக்கும் கடைசிச் கட்டத்தை அடைந்திருக்கிறுன். இனி அவன் முன்யோசனையோடு, மன ஒற்றுமைக்கு விரோதமான தடைகளை வெல்ல வேண்டும்

ஃ ஃ ஃ

உலக ஒற்றுமைக்கு முக்கியத் தடையாக உள்ளது தேசிய உணர்ச்சியேயாகும். இன்றைய சரித்திரத்தில்,

மனித குலத்தின் முதல் எதிரி இந்தத் தேசிய உணர்ச்சியே யாகும். எனவே இதன் பல்லைப் பிடுங்குவதே முதலாவது வேலை. இது அவசரமான வேலையும்கூட. தேசிய உணர்ச்சியின் தீமைகளைக் கட்டுப்படுத்தினால், உலக ஒற்றுமைக்கான முயற்சிகளைப் பலப்படுத்த முடியும்.

ஆனால் இந்த தேசீய உணர்ச்சிதான், புதிய, உலகம் முழுவதையும் அணைக்கும் நவீன நாகரிகத்துக்கும் எல்லோரும் ஓர் குலம் என்ற புதிய சமுதாயத்துக்கும் நம்மை அழைத்துச் செல்லும் இயக்கமாகவும் அமைந்திருக்கிறது.

தேசீயத்தில் பிளவு படும் அல்லது பிரிந்து போகும் அம்சத்தைக் குறித்து ஆராய்வோம். உதாரணமாக இந்தியாவையே எடுத்துக்கொள்வோம். 1947 ஆம் ஆண்டிற்குப்பிறகு இந்தியாவில் நிகழ்ந்தது என்ன? மௌரிய, குப்தமொகல் ராஜ்யங்களைப் போலவே, பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்தியாவை ஒன்றுபட்ட ஆட்சி முறைக்குள் கொண்டுவந்தது. பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறிய பின், இந்தியா ஒரு நாடாக இல்லை—மூன்றாகப் பிரிந்தது. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே உள்ள எல்லைகள் இயற்கையானவை அல்ல; செயற்கையாக வகுக்கப் பெற்றன. 1918 ஆம் ஆண்டில் ஹாப்ஸ்பர்க் சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றபின், கிழக்கு ஐரோப்பாவில் எல்லைகள் வகுத்ததைப் போலவே, இந்தியா—பாக்கிஸ்தான் எல்லையும் வகுக்கப் பெற்றிருக்கிறது. மூன்றாவது, காஷ்மீர். அந்தத் தகராறு இன்னும் தீரவில்லை.

தகராறு இல்லாத இந்திய யூனியன் பிரதேசத்தையே பாருங்கள். மொழிவாரியாக மாகாணங்களைப்

பிரித்திருக்கிறார்கள். "மொழி வெறி" யினால் பிளவுகளும் சங்கடங்களும் தோன்றியுள்ளன. இந்தத் துரதிஷ்ட நிலைமை தவிர்க்க முடியாதது.

அடிமை ஆட்சியில் இருந்த பல நாடுகள், இப்பொழுது சுதந்திர நாடுகளாக மாறி வருகின்றன. இம்மாதிரி நாடுகள் பெருகுவதும், அரசியல் அடிப்படையில் பிரிவுகள் உண்டாவதும்அவசியமே. என்றாலும், இந்த அவசியமானது இவற்றிலுள்ள தீமைகளைப் போக்காது. ஆனால் அதே சமயத்தில் இந்த அரசியல் பிரிவுகள் ஒற்றுமையினின்று விலக்கிச் செல்லாமல் ஒற்றுமையை நோக்கியே செல்கின்றன. மக்களின் அறநெறியால் உண்டாகும் ஆக்க வேலைகள், அரசியல் பிளவுகளால் உண்டாகும் நாசவேலைகளைப் பயனற்றுப் போகும்படி செய்துவிடும்.

இந்நாளில் தேசங்களுக்குச் சுதந்திரம் மட்டும் போதாது. பிறர் உதவி இல்லாமல் வாழ முடியாத நிலை இன்றைய உலகப்போக்கில் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கா, ருஷ்யா போன்ற நாடுகளும் இதற்கு விலக்கு அல்ல.

ஃ ஃ ஃ

பிறர் கருத்து வேற்றுமைகளைப் பொறுத்துக்கொள்வதும், அஹிம்சையும் இந்திய நாட்டின் சிறந்த அம்சங்களாகும். இன்றைய உலகில் மற்ற நாடுகளுக்கு இவை ஒரு மதிப்பற்ற பாடமாகும்.

இந்த அணுயுகத்தில் நாம், நமது சகோதர மனிதர்களுடன் பழகுவதிலும், காரியங்களைச் செய்வதிலும் அஹிம்சை முறையை மேற்கொண்டால்தான், மனித சமூகம் தனக்கு அழிவு நேராமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். இது எவ்வளவு கடினமானது என்பது நமக்குத்

தெரியும். இந்தியர்களாகிய நீங்கள், சீனவுடன் தற்பொழுதுள்ள தகராறில் அஹிம்சை வழி கஷ்டமாயி இருப்பதை உணர்கிறீர்கள். ஆனால் காந்திஜிக்கும், எதிர் காலச் சரித்திரத்திற்கும் நீங்கள் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. அக்கடமையாவது, எப்பொழுதும் அஹிம்சையைப் பற்றிமற்ற நாடுகளுக்கு உதாரண விளங்குவதே. இந்தியப் பண்பாட்டிலேயே மிகச் சிறந்ததும், ஒப்புயர்வற்றதுமான அஹிம்சை வழியை இந்தியா எப்பொழுதாவது விட்டுவிட நேர்ந்தால், அது மனித சமூகத்தையே இருளில் ஆழ்த்திவிடும். எனவே இந்த மகத்தான ஆன்மிகப் பொறுப்பு இந்தியாவைச் சார்ந்திருக்கிறது உங்கள் செய்கை—அது எந்த வழியில் சென்றாலும்—மனித சமூகத்தை நல்லதாகவோ அல்லது தீயதாகவோ நிச்சயமாகச் செய்யக்கூடும். அதாவது மனித இனம் வாழ்வதா அல்லது அடியோடு மாள்வதா என்பதையும் தீர்மானிக்கக்கூடும்.

உலகத்தில் இந்தியா ஒரு முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே இந்தியா உலகில் ஒரு கேந்திர ஸ்தானமாக இருந்து வருகிறது.

உலகத்திலுள்ள பிரச்னைகள் எல்லாம் சுருங்கிய அளவில் இந்தியாவில் இருக்கின்றன. இந்திய அரசாங்கத்தாரும் இந்திய மக்களும் அவற்றை எதிர்த்துப் போராடுகின்றனர்.

இந்தியர்கள் வாழ்க்கையை நோக்கும் முறையும், மக்கள் சமுதாயத்தின் சம்பவங்களைக் கையாளும் முறையும், தற்காலத் தேவைக்கு சிறந்த பதிலாகும்.

பூகோள ரீதியாக மட்டும் இந்தியா உலகில் முக்கிய ஸ்தானம் வகிக்கவில்லை. கொள்கைகளுக்காக உலக வல்லரசுகளிடையே உள்ள பெரும் போட்டியில், இந்தியா

தான் தராசு முனையில் நிற்கிறது. இந்தியா ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டதால், ஆசியாவில் அதற்கு ஒரு பிடிப்பு இருக்கிறது.

இந்தியாவின் சமூதாய நலத் திட்டங்கள், நீண்ட காலமாக அமுக்கப் பெற்றிருந்த இந்திய விவசாயிகளிடையே ஓர் நம்பிக்கையையும், உறுதியையும் உண்டாக்கியிருக்கிறது. இது விஸ்தாரமான நிலப்பரப்பில் நடைபெறும் பெரும் புரட்சியாதலால், இதில் தடைகளும் தாமதங்களும், சில இடங்களில் தோல்வியும்கூட ஏற்படும். ஆனால் உங்களுடைய சமூதாய நலத்திட்ட நடைமுறைகளை உலக முழுவதும் அக்கறையுடன் கவனித்து வருகிறது. நீங்கள் இத்துறையில் செய்யும் காரியங்களை உலக மக்கள் கூர்ந்து நோக்குகின்றனர். ஏனென்றால் இந்தியா விவசாயிகளைக் கட்டாயப்படுத்தவில்லை; அவர்களை ஊக்க மூட்டுகிறது. இந்தியா இத்துறையில் வெற்றி பெறுமானால், அது உலக முன்னேற்றத்துக்கு ஒரு நல்ல சதனமாகும்.

இனவேற்றுமை, குறிப்பாக இந்தியாவிலும்ஆப்பிரிக்காவிலும்தான் மிகக் கடுமையாக இருந்தது. இந்த வேற்றுமையைப் (தீண்டாமையைப்) போக்க இந்தியா மிகுந்த தைரியத்துடன் சட்டம் இயற்றியது. இனவேற்றுமை பிரச்னை, ஜனப்பெருக்கத்தைக் கட்டுப் படுத்தும் பிரச்னையைப் போன்றது. இதனை அரசாங்கத்தால் மட்டும் செய்துவிட முடியாது. இது பூரண வெற்றிபெற கோடிக்கணக்கான மக்களின் மனம் மாறவேண்டும். அதற்கு அவர்கள் அறிவு விருத்தியடைய வேண்டும். எனவே பூரண வெற்றிபெற நாள் ஆகும்.

எல்லா மதங்களுக்கும் இந்தியா சம உரிமை அளித்திருப்பது மிகவும்,பாராட்டத்தக்கது.இந்துமதம் தனக்கு

முதலிடம் கேட்கவில்லை. தனது உரிமைகளைத் தானே மறுத்தது. அந்த மதத்தின் உண்மையான தன்மையும் அதுவே. நாலாவது நூற்றுண்டில் ரோமன் சக்கரவர்த்தி தியோடோஸியஸும், பதினேழாவது நூற்றுண்டில் முகலாய சக்ரவர்த்தி ஔரங்கசேபும் செய்த தவறுகளை நீங்கள் செய்யவில்லை. இந்து மதத்தை இந்தியாவின் அரசாங்க மதமாக நீங்கள் ஆக்கவில்லை.

இந்தியா காட்டும் பொறுமையும், ஒருவரின் ஆத்மீக வாழ்வுக்குப் புற நிகழ்ச்சிகளால் தடை ஏற்படாமல் பாதுகாக்கும் பண்பும், மனித சமூகத்தை அதுதானே அழிவதிலிருந்து பாதுகாக்கக்கூடும். மனிதனை மனிதனுக்கும் ஆத்மீகப் போர் இந்தியரின் உள்ளங்களில் இன்னும் உயிரோடு இருக்கிறது. இதனை உலகத்துக்கு வாரி வழங்கிக்கொண்டே இருங்கள். இதைப்போல வேறு எதுவும், மனித சமூகத்தை அதுதானே அழித்துக்கொள்வதிலிருந்து காப்பாற்ற உதவி செய்ய முடியாது.

# ஆளிலாப் பொறிமுறை

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தொழிற் புரட்சி ஏற்பட்டது; பொருளாதாரத்துறையிலும் பெருத்த மாறுதல்கள் தோன்றின. இன்று மனிதன் இல்லாமல் இயந்திரமே இயந்திரங்களை இயக்கும் புதுமுறை—ஆட்டோமேஷன்—தோன்றியிருக்கிறது, இதனாலும் பெருத்த மாறுதல்கள் நிகழும். புதுமுறை உருவாகிப் பத்தாண்டுகளாகின்றன.

தொழிற்சாலைகளில் தொழிலாளி இன்று இயந்திரத்தை முடுக்கிவிடுகிறான்; அது ஒழுங்காக வேலை செய்கிறதா என்று பார்க்கிறான்; அதனுள் போட வேண்டியதைப் போடுகிறான்; அதிலிருந்து எடுக்க வேண்டியதை எடுக்கிறான் : இந்நான்கு வேலைகளையும் இனி இயந்திரங்களே செய்துவிடும்; அவன் தேவையில்லை. மாறும் நிலைமைக்குத் தக்கவாறு மாறவும், தவறுகள் நேர்ந்தால் திருத்தவும், உற்பத்திப் பண்டங்களைச் சரிபார்க்கவும், தேய்ந்த பாகங்களை மாற்றவும் புது முறை இயந்திர இயக்கமே போதும்; அந்தந்த இயந்திரத்தின் அருகில் ஆள் இருந்து வேலை செய்ய வேண்டிய தேவை இல்லை.

அமெரிக்காவில், ஆள் இருந்து வேலை செய்யும் இயந்திர முறையை எடுத்துவிட்டு, ஆளிலாப் பொறி முறையை (ஆட்டோமேஷன் முறையை)ப் பெரிதும் கைக்கொண்டு நெடுநாளாக நடக்கும் தொழில்களில் ஒன்று பெட்ரோல் தொழில். நாள் ஒன்றுக்கு நாலு லட்சம் ஹெக்டோலிட்

டர் எண்ணெய்சுத்தமாகும் ஒரு பெரிய தொழிற்சாலையில் 20 மாடிக் கட்டிட உயரத்துக்கு எஃகு கோபுரங்களும், நூற்றுக் கணக்கான கிலோ மீட்டர் நீளத்துக்குக் குழாய்களும் தோன்றும்; இவ்வளவையும் மேற்பார்த்து வேலை செய்யும் தொழிலாளிகளோ ஐந்தே ஐந்து பேர்களே இருப்பர். தொழிற்சாலையின் ஒரு மூலையில் சுத்தமற்ற எண்ணெய் சொரியும்; ஆளிலாப் பொறி முறையின் மூலம் அது செல்ல வேண்டிய இடங்களுக்கெல்லாம் சென்று சுத்தமாகி, வேலைதீர்ந்து பற்பலவகைப் பொருள்களாக வெளிவரும்.

மோட்டார்க் கார் உற்பத்தியிலும் ஒரு வகை ஆளிலாப் பொறி முறையைக் கையாளுகின்றனர். போர்டு மோட்டார்க் கம்பெனிக்குக் கிளீவ்லாந்து என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலையில் 1952ஆம் ஆண்டு முதல் இவ்வகை முறை நடைபெறுகிறது. மோட்டார் இயந்திரங்களை உருவாக்குவதற்குத் துளையிடல், அராவுதல், தேய்த்தல் தட்டுதல் முதலிய 530 வேலைகளை பதினாலரை நிமிஷ நேரத்தில் செய்து முடிப்பதற்கு இவ்வகை ஆளிலாப் பொறிமுறை உதவுகிறது.

அலுவலகங்களில் ஆளிலாப் பொறிமுறை அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது. அமெரிக்கக் கம்பெனிகளில்மொத்தம் 1 240கணக்குக்கருவிகள் உள்ளன; இத்தகைய கருவிகளில் ஒன்று "மாடல் 705" என்பது. பயிற்சியுள்ள 25,000 கணித ஆசிரியர்கள் செய்யக்கூடிய கணக்குகளை இந்தக் கருவியின் துணைவியால் ஒரே ஒருவனே செய்துவிடுவான். 127 இலக்கங்கள் உள்ள இரண்டு எண்களின் பெருக்கத்தை இக்கருவியால் ஒரு விநாடியின் மூன்றில் ஒருபங்கு நேரத்தில் கண்டுபிடித்துவிடலாம். சிக்கலான கணக்குகளையெல்லாம் இக்கருவி இவ்வாறு ஒரு

நொடியில் தீர்த்துவிடும்; விடைகளை ஒரு வரிக்கு 120 எழுத்துக்கள் கொண்டதாக நிமிஷத்துக்கு 1,000 வரிகள் வீதம் அச்சடித்துவிடும்.

டெலிபோன் கம்பெனியிலும் இவ்வகை ஆளிலாப் பொறி முறை உண்டு. நெடுந்தொலைவிலுள்ள நகரம் ஒன்றில் ஒருவருக்கு டெலிபோன் செய்ய வேண்டுமானாலும், இடையில் டெலிபோல் பணியாள் உதவியின்றி நேரடியாகப் பேசக்கூடிய வசதி இப் புதுமுறையின் பயனேயாகும்.

எல்லா வேலைகளுக்கும் ஆளிலாப் பொறிமுறை வந்துவிடுமோ என்ற அச்சம் வேண்டாம். கட்டுமான வேலையில் தச்சுத் தொழில், மின்விசை வசதி செய்தல், குழாய் அமைத்தல், கூரை அமைத்தல், வர்ணம் தீட்டுதல் இவற்றுக்கெல்லாம் ஆள் இல்லாமல் தீராது. சில்லரை வியாபாரத்திலும், மக்கள் பொருள்களைக் கண்ணால் பார்த்து, விற்பனையாளர்களை நேரில் கண்டு பேசித்தான் வாங்குவார்கள். கார் ஓட்டவும், பஸ் ஓட்டவும் ஆள் வேண்டும். கார், ரயில்வண்டி, விமானம் இவற்றைப் பழுது பார்க்கும் பணிகளும் ஆளில்லாமல் நடவா, முடிவெட்டவும், தோட்டம் போடவும், உணவு விடுதிகளைக் கவனிக்கவும் ஆள் இன்றி முடியாது.

ஆளிலாப் பொறி முறையைப் பயன்படுத்தக்கூடிய பல தொழில்களிலும் அதை மெல்லவே கைக்கொள்ள முடியும். ஏனெனில். அதற்குத் தக்கபடி இயந்திரங்களில் பல மாறுதல்கள் செய்ய வேண்டியுள்ளன. ஆயிரக்கணக்கான கருவிகளை மாற்ற வேண்டியுள்ளது.

நாளடைவில் அமெரிக்காவின் உற்பத்தித் தொழில்களில் உள்ள வேலை முறைகளில் நூற்றுக்கு 16 பங்கு ஆளிலாப் பொறி முறை மூலம் இயங்கும் எனக் கணக்

கிட்டுள்ளர். மோட்டார் உற்பத்தித் தொழிலில் நூற்றுக்கு 33 பங்கும் விமான உற்பத்தித் தொழிலில் பாகங்கள் உற்பத்தி செய்வதில் நூற்றுக்கு 20 பங்கும், இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் நூற்றுக்கு 15 பங்கும் அடுத்த சில ஆண்டுகளுக்குள் ஆளிலாப் பொறி முறையினுல் இயங்கும் என மதிப்பிடுகின்றனர்

புது முறையினுல் புதுத் தொழில் ஒன்று தோன்றியுள்ளது. ஆளிலாப் பொறி முறைக்கு வேண்டிய கருவிகளைச் செய்யும் கம்பெனிகள் 1955-க்குள்ளேயே 1,000 தோன்றி விட்டன. ஆண்டு ஒன்றுக்கு இவை 750 கோடி ரூபாய் பெறுமான தளவாடங்களை விற்பனை செய்தன.

ஆளிலாப் பொறி முறை பெருகப் பெருகத் தொழிலாளிகள் நிலை என்னவாகும் என்று கேட்பது இயற்கை. தொழிலாளர் இதைப் பற்றி இவ்வாறு கருதுகின்றனர்: மக்கள் குலத்தின் அடிப்படைப் பொருளியல் தேவைகளை தீர்ப்பதற்கு வேண்டிய செழிப்பை உருவாக்கக் கூடிய கருவிகள் உலக வரலாற்றிலேயே இப்பொழுதுதான் முதன் முதலாகக் கிடைத்துள்ளன. ஆகவே தொழில் நுட்ப முன்னேற்றத்தை வரவேற்கின்ருேம். ஆனுல், இந்தத் தொழில் நுட்பத்தின் பலன்கள் தொழிலாளிகளும் பொருள் வாங்குவோருமான எங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்ருேம்.

வேலை நேரத்தைக் குறைத்தல், ஊதியத்தை அதிகமாக்கல் முதலியவற்றில் தொழிலாளர் சங்கங்கள் அக்கறை கொண்டுள்ளன.

தொழில் நிர்வாகிகளுக்கும் சில சிக்கல்கள் உள்ளன. ஆளிலாப் பொறிமுறை ஏற்படும்போது, தொழிலாளிகளின் வேலைத் திறமும் உயர வேண்டும். தகடுகளைத்

தூக்கி வைப்பதே வேலையாக இருந்த ஒருவன் இனிக் கருவிகளின் குறிகளைக் கண்டு அவற்றின் பொருளை அறியவேண்டும். தானே இயங்கும் சுமை தூக்கும் பட்டை பழுது பட்டால், அதை ஒரு கருவி அடையாளம் செய்து தெரிவிக்கும்; அதை அறிந்து பழுது பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் புதுப் பயிற்சி தேவை. எனவே, வேலையில் வைத்துக் கொண்டே பயிற்சியளிக்கும் பிரச்னை நிர்வாகிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

தொழில் நுட்ப முன்னேற்றந்தான் அமெரிக்காவின் தொழில் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக அன்று முதல் இருந்து வருகிறது. அம்முன்னேற்றத்தினால் புதுத் தொழில்களும் புதுப் பண்டங்களும் உருவாகியுள்ளன. எனவே வேலை வாய்ப்பு குறையுமோ என்ற கவலை தேவையில்லை.

"ஆளிலாப் பொறி முறையினால் வேலையின்மை தோன்றாது; தொலைந்த வேலைகளைவிட அதிக வேலைகள் அதனால் உருவாகும். புதிய வேலைகள் உயர்ந்த வேலைகளாகவும் இருக்கும்; இதனால் ஊதியமும் அதிகமாக இருக்கும்" என்று ஆளிலாப் பொறிமுறைபற்றி ஆராய்ந்த அமெரிக்க குழுவின் தலைவர் கூறுகிறார்.

# மாறிவரும் ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்காக் கண்டத்தின் நிலப்பரப்பு ஒருகோடியே பன்னிரண்டு லட்சம் சதுர மைல். இந்தியாவைப் போலச் சுமார் ஒன்பது மடங்கு பெரிது. ஆப்பிரிக்காவின் வடக்கே யிருந்து தெற்கே செல்ல ஐயாயிரம் மைல் ஆகும்.

உலகில் மிகப் பெரிய சஹாரப் பாலைவனம் ஆப்பிரிக்காவில்தான் இருக்கிறது. சஹாராவுக்கு மேலேயுள்ள பகுதிகளில் வெள்ளைக்காரர்கள் வசிக்கின்றனர்; கீழே யுள்ள பகுதிகளில் கறுப்பு நிறத்தவர்கள் வசிக்கின் றனர்.

ஆப்பிரிக்காவில் ஏற்கெனவே எகிப்து, எதியோப் பியா, லைபேரியா முதலியவை சுதந்திர நாடுகள். இரண் டாவது உலக யுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட தேசிய உணர்ச்சியின் காரணமாக, லிபியா, சூடான், மொராக் கோ, டியூனிஸியா, கனா, கினியா, காமிரூன், நைஜீரியா, டோகோலாந்து முதலிய நாடுகள் பூரண சுதந்திரமடைந் தன. மற்றும், கென்யா, பெல்ஜியன் காங்கோ, பிரிட்டிஷ் சோமாலிலாந்து, வட ரொடீஷியா, மாலி முதலிய நாடுக ளும், பிரெஞ்ச்காரர் வசமுள்ள குடியேற்றப் பகுதிகளும் சுதந்திரப் பாதையை நோக்கிச் செல்கின்றன.

கனா, கினியா நாடுகளில் அதிகாரம் முழுதும் நீக்ரோக் களிடம். அங்கு நிரந்தரமாக வசிக்கும் வெள்ளைக்காரர் தொகை மிகக் குறைவு. சில வெள்ளைக்காரர்களை, அர சாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக நியமித்திருக்கி

ரூர்கள். இவர்கள் அந்நாடுகளில் நிரந்தரமாக வசிப்பவர்கள் அல்லர். பதவிக் காலம் முடிந்ததும் தாய்நாடு திரும்பிவிடுவார்கள்.

பெல்ஜியன் காங்கோ, கென்யா முதலிய நாடுகளில், ஆட்சி முழுவதும் சிறுபான்மையோரான வெள்ளைக்காரர் கையில் இருக்கிறது. ஆனால் இவர்கள், ஐரோப்பாவில் உள்ள தங்கள் தாய்நாட்டு அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். இந்நாடுகளிலும், சில சமயங்களில் நீக்ரோக்கள் கிளர்ச்சி செய்தனர்; ஆட்சியில் தங்களுக்கு நியாயமாக உள்ள உரிமை வேண்டுமென்று கூறினர். நீக்ரோக்கள் கோரிக்கையை, வெள்ளைக்காரர் நிராகரித்தனர். என்றாலும், ஐரோப்பாவிலுள்ள தாய்நாட்டு அரசாங்கங்கள் தலையிட்டு, நீக்ரோக்களுக்கு இப்பொழுதிருப்பதை விட இன்னும் அதிகமான உரிமையும், அதிகமான அதிகாரமும் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தின.

இன்று உலக மக்கள் கவனத்தை ஈர்ப்பது தென்னாப்பிரிக்கா. இது ஒரு சுதந்திர நாடு. இங்கு அதிகாரம் முழுவதும் வெள்ளைக்காரரிடம். இவர்கள் ஐரோப்பாவில் உள்ள எந்தஅரசாங்கங்கத்துக்கும் உட்பட்டவர்கள் அல்லர். எனவே இவர்கள் தம் இஷ்டப்படி காரியங்களைச் செய்கிறார்கள். ஆப்பிரிக்காக் கண்டத்திலேயே மிக்கக் கொடுமையான ஆட்சி நடைபெறும் நாடு தென்னாப்பிரிக்காதான்.

வனப்பு மிக்க தென்னாப்பிரிக்காவின் நிலப்பரப்பு நாலு லட்சத்து எழுபத்து மூவாயிரம் சதுர மைல். மக்கள் தொகை சுமார் ஒன்றரைக் கோடி.

மக்கள் தொகை ஒன்றரைக் கோடியில், நீக்ரோக்கள் தொகை மட்டும் ஒரு கோடி. இவர்கள் பாண்ட்டு என்

னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பாதிப்பேர், இவர்களுக்காக ஒதுக்கப் பெற்றுள்ள தனியிடங்களில் வசிக்கின்றனர். மீதிப் பேர், வெள்ளைக்காரர் பண்ணைகளிலும், தங்கச் சுரங்கங்களிலும் வேலை செய்கின்றனர்; நகரங்களில் வீட்டு வேலைக்காரர்களாகவும் உள்ளனர்.

வெள்ளைக்காரர் தொகை முப்பது லட்சம். இவர்களில் பதினேழு லட்சம் பேர் டச்சு வமிசா வழியினர். இவர்களை ஆப்பிரிக்கனீர் என்றழைக்கிறார்கள். இவர்கள் பேசுவது கொச்சையான டச்சு மொழி.

வெள்ளைக்காரரில் பாக்கி பதின்மூன்று லட்சம் பேர், பிரிட்டிஷ் மக்களின் வம்சா வழியினர். இவர்கள் மொழி ஆங்கிலம்.

'கலர்டு' என்றழைக்கப் பெறும் மக்கள் தொகை பதினன்கு லட்சம். இவர்கள் இந்நாட்டில் ஆரம்பத்தில் குடியேறிய வெள்ளைக்காரருக்கும், அடிமைகளாக வேலை செய்தோருக்கும் பிறந்தவர்கள். இவர்களுடைய சமுதாய அந்தஸ்தும், சட்ட உரிமைகளும் நீக்ரோக்களைக் காட்டிலும் உயர்வு; ஆனால் வெள்ளைக்காரரை விடக் குறைவு.

ஒப்பந்தக் கூலிகளாகச் சென்ற இந்திய வம்சா வழியினர் தொகை சுமார் ஐந்து லட்சம். மலேயாவிலிருந்து அடிமைகளாகச் சென்றவர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஐம்பதாயிரம்.

தென்னாப்பிரிக்காவில், கேப், நெட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரீ ஸ்டேட்ஸ் என்ற நான்குமாகாணங்கள் உள்ளன. அந்நாட்டுக்கு இரண்டு தலைநகரங்கள் உண்டு பிரிட்டோரியா நகரத்தில் அரசாங்கக் காரியாலயங்கள்

இருக்கின்றன. கேப் டவுன் நகரத்தில் பார்லிமெண்டு இருக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் மிகப் பெரிய நகரம் ஜோகன்னெஸ்பர்க். இதன் ஜனத்தொகை சுமார் ஒன்பதுலட்சம். இரண்டாவது பெரிய நகரம் டர்பன்; ஜனத்தொகை நாலரை லட்சம்.

உலகத்திலேயே அதிகமான தங்கத்தையும் வைரத்தையும் உற்பத்தி செய்யும் நாடு தென்னாப்பிரிக்கா. யுரேனியம், கம்பளநூல் முதலியவற்றையும் அந்நாடு ஏற்றுமதிசெய்கிறது. வளம் மிக்க பண்ணைகள் ஏராளம்.

*1652*-ஆம் ஆண்டில் ஹாலந்து (டச்சு) அரசாங்கம் ஒரு சிறு குடியேற்றத்தை அமைத்தது. அதற்கு *150* வருஷங்களுக்கு முன்னே "நன்னம்பிக்கை முனை"யைப் (Cape of Good Hope) போர்த்துக்கீசியர் கண்டு பிடித்தனர்.

குடியேறிய போயர்கள் (போயர் என்பது டச்சு மொழியில் குடியானவன் என்று பொருள்) அவ்வழியே வந்து சென்ற டச்சுக் கப்பல்களில் உள்ளவர்களுக்கு உணவளிப்பதற்காக உழுது பயிரிட்டனர். அப்பொழுது கேப் என்பது ஒரு குக்கிராமம்.

*1806*ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் நெப்போலிய யுத்தம் நடைபெற்றபொழுது, பிரிட்டிஷார் கேப் என்னும் இடத்தைக் கைப்பற்றினர். *1833*ஆம் ஆண்டில், டச்சுக்காரர்களால் அழைத்துச் செல்லப் பெற்ற அடிமைகளை எல்லாம் பிரிட்டிஷார் விடுவித்தனர். இதனால் பெரும் கோபமடைந்த போயர்கள், கேப்பை விட்டு, வடக்கே சென்று குடியேறியனர். தாங்கள் மட்டும் தனியாக ஒரு

எல்லையை வகுத்துக் கொண்டு சுதந்திரப் பிரகடனம் செய்தனர். ஐரோப்பாவில் உள்ள தங்கள் தாய் அரசாங்கத்தின் தொடர்பை விட்டுவிட்டனர்.

போயர்கள், பாண்ட்டுக்கள், பிரிட்டிஷார் ஆகியோரிடையே அடிக்கடி போர்கள் மூண்டன. *1899—1902*ஆம் ஆண்டில் நடைபெற்ற போயர் யுத்தத்தில், இறுதியாகப் பிரிட்டிஷார் வெற்றி பெற்றனர். இந்த யுத்தத்தின் போதுதான் காந்தியடிகள் பிரிட்டிஷார் பக்கம் சேர்ந்து, ஆம்புலன்ஸ் படையில் தொண்டாற்றினர்.

தென்னுப்பிரிக்காவில் பியூச்சோலாந்து, பஸ்டோலாந்து, ஸ்வெய்ஸிலாந்து ஆகிய மூன்று பெரும் பகுதிகளை நீக்ரோக்களுக்குத் தனியாக ஒதுக்கிவிட்டு, மற்றப் பகுதிகளை, *1910*ஆம் ஆண்டில் பொறுப்பாட்சியுள்ள தென்னுப்பிரிக்க யூனியன் அரசாங்கமாகப் பிரிட்டன் இணைத்தது. ஆனால் *1931*ஆம் ஆண்டில்தான் தென்னுப்பிரிக்காவுக்கு முழுச் சுதந்திரம் கிடைத்தது.

ஆரம்ப முதலே, இந்த யூனியனில் உள்ள வெள்ளைக்காரர்கள் இரண்டுபெரியஅரசியல்கட்சிகளாகப்பிரிந்தனர். ஒன்று யுனைட்டெட் கட்சி. இவர்கள் இரண்டு உலக யுத்தங்கள் நடந்த போதும் ஆட்சி செலுத்தி வந்தனர். இரண்டு உலக யுத்தங்களிலும் கலந்து கொண்டனர். இக்கட்சியினர் ஆங்கில மொழி பேசும், பிரிட்டிஷ் அபிமானிகள்.

பிரிட்டனுக்கு எதிராக உள்ளது நாஷனலிஸ்ட் கட்சி. இக்கட்சியின் அங்கத்தினர்கள் அனைவரும் டச்சு வம்சா வழியினரான போயர்கள். *1948*ஆம் ஆண்டுத் தேர்தலில் இவர்கள் வெற்றி பெற்றனர். *1953, 1958*ஆம்

ஆண்டுத் தேர்தல்களிலும், இவர்கள் முன்னரைக் காட்டிலும் அதிகமான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

சட்டசபையில் மொத்த ஸ்தானங்கள் 163. இவற்றில் வெள்ளைக்காரர்களால் தேர்ந்தெடுக்கப்பெறும் ஸ்தானங்கள் 156. இதில் 103 ஸ்தானங்கள் நாஷனலிஸ்ட் கட்சி, 53 ஸ்தானங்கள் யுனைட்டெட் கட்சி. பாக்கியுள்ள 7 ஸ்தானங்களில், 'கலர்டு' மக்களால் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெறும் வெள்ளைக்காரர்கள் 4 பேர்; நீக்ரோக்களால், தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெறும் வெள்ளைக்காரர்கள் மூன்று பேர். நாஷனலிஸ்ட்டு கட்சியின் அடிப்படை நோக்கங்கள் இரண்டு. ஒன்று வெள்ளைக்காரர் ஆதிக்கம் நிலைக்க வேண்டும். மற்றொன்று, வெள்ளைக்காரர் ஆதிக்கத்திலும் போயர்கள் ஆதிக்கமே மேலோங்க வேண்டும்.

எனவே அபார்தீட் என்னும் இன ஒதுக்கல் கொள்கையை நாஷனலிஸ்ட் அரசாங்கம் மேற்கொண்டது. நீக்ரோக்களை நகரங்களிலிருந்து விரட்டி, அவர்களுக்கென ஒதுக்கப்பெற்ற இடங்களுக்கே திரும்பச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினர். நீக்ரோக்களுக்கு வேலைவாய்ப்புக்களைக் கட்டுப்படுத்திச் சட்டமியற்றினர். பிரிட்டிஷ் அதிகாரத்திலுள்ள, நீக்ரோக்கள் வசிக்கும் பியூச்சோலாந்து பஸ்டோலாந்து, ஸ்வெயிஸிலாந்து முதலியவை தங்களைச் சேர்ந்தது என்று உரிமை கொண்டாடினர். இந்தியர்கள், கலர்டு என்ற கலப்பு இனத்தவர் உரிமைகளைக் கட்டுப்படுத்தினர். தேர்தல் முறைகளைப் பண்ணை மக்களுக்குச் சாதகமாக இருக்கும்படி (போயர்கள் பெரும்பாலும் பண்ணைகளில் வாழ்பவர்கள்) மாற்றி அமைத்தனர். தென்னாப்பிரிக்கா, காமன்வெல்த்திலிருந்து விலகி, பூரண சுய

ஆட்சி பெற்ற நாடாக ஆகவேண்டும் என்னும் கருத்துடன், இவ்வாண்டில் பொதுஜன வாக்கெடுப்புத் திட்டமிட்டுள்ளனர். தென்னப்பிரிக்காவில் அரசாங்க மொழிகள் ஆங்கிலமும், டச்சும். ஆங்கில மொழியை அரசாங்க மொழியிலிருந்து நீக்கிவிட முயலுகின்றனர்.

வெள்ளைக்கார ஆதிக்கம்தான் இருக்கவேண்டும் என்பதில் நாஷனலிஸ்டுக் கட்சிக்கும், பிரிட்டாஷாருக்குச் சாதகமாக உள்ள யுனைட்டெட் கட்சிக்கும் கருத்து வேற்றுமையே கிடையாது. ஆனல் நாஷனலிஸ்ட் கட்சி கையாளும் முறைகள் இவ்வளவு கொடூரமாய் இருக்கக் கூடாது என்பதே யுனைட்டெட் கட்சியின் கருத்து.

சமீபத்தில் தென்னப்பிரிக்கப் பார்லிமெண்டில், நீக்ரோக்களின் ஆப்பிரிக்கன் நேஷனல் காங்கிரஸ், பான் ஆப்பிரிக்கனிஸ்ட் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று நாஷனலிஸ்ட் கட்சி தீர்மானம் கொண்டு வந்தபொழுது, யுனைட்டெட் கட்சி அங்கத்தினர் பலர் அதற்குச் சாதகமாக வாக்களித்தனர். தீர்மானத்துக்குச் சாதகமான வாக்கு 128; பாதகமான வாக்கு 16.

ஆப்பிரிக்கன் நாஷனல் காங்கிரஸ் 1912ஆம் ஆண்டில் தோன்றியது. அதிலுள்ள தீவிர அங்கத்தினர்களில் சிலர் அதைவிட்டுப் பிரிந்து பான் ஆப்பிரிக்கனிஸ்ட் காங்கிரஸ் என்ற கட்சியைத் தோற்றுவித்தனர்.

ஆப்பிரிக்கன் நாஷனல் காங்கிரஸின் தலைவர் ஆல்பர்ட் லூத்தூலி. இவர் ஆப்பிரிக்க இனமக்களின் தலைவர்.

பான் ஆப்பிரிக்கனிஸ்ட் காங்கிரஸின் தலைவர் ராபர்ட் மங்காலிஸ் சோபுக்வே. இவர் ஒரு கலாசாலைப் பேராசிரியராக இருந்தவர்.

தென்னுப்பிரிக்காவில் உள்ள பத்துக்கோடி நீக்ரோக் களுக்கும் அரசியல் ஆர்வம் உண்டாக வில்லை. இவர்களில் பெரும்பாலோர் தங்கள் தனியிடங்களில், அதிக நாகரிக மடையாமலே வாழ்கின்றனர். என்றுலும் இரண்டு அரசி யல் கட்சிகளிலுமுள்ள நீக்ரோக்கள் தொகை ஒரு லட்சத் துக்குக் குறையாது.

நாஷனலிஸ்ட் கட்சியினர் ஆட்சிக்கு வந்தவுடன் நீக்ரோக்களை நகரங்களிலிருந்து அப்புறப்படுத்தினர். அதுமட்டுமல்லாமல், அவர்கள் சுயேச்சையாக நடமாடு வதையும் கட்டுப்படுத்தினர். ஒவ்வொரு நீக்ரோவும் ஒரு பாஸ் (Pass) எப்பொழுதும் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்றும் சட்டமியற்றினர். பாஸ் என்பது பாஸ்போர்ட் போன்ற ஒன்று; கேட்கும்போதெல்லாம் அதைக் காட்டவேண்டும்.

திறமையுடன் செய்யக்கூடிய எந்த வேலையையும் நீக்ரோக்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சட்ட மியற்றினர். பொது இடங்களில் நீக்ரோக்களை அனு மதிக்கக் கூடாது என்று கடுமையான தடை விதித்தனர். இன ஒதுக்கல் முறையை வெற்றிகரமாக அமலாக்கவும், அதனை எதிர்ப்போரை மிக வன்மையாகத் தண்டிக்கவும் அதிகாரமளிக்கும் சட்டங்களை இயற்றினர். தென்னுப் பிரிக்க அரசாங்கத்தின் இச்செயல்களுக்கு, உலக நாடு களின் எதிர்ப்புப் பலமாக இருந்தது. என்றுலும் தங் கள் கொள்கையைத் தளர்த்த முடியாது என்று அரசாங் கத்தார் உறுதியாக இருக்கின்றனர். வெள்ளைக்காரர்

தொகையைக் காட்டிலும் நீக்ரோக்கள் தொகை மூன்று மடங்கு அதிகம். இந்த நிலையில் எந்த சமுதாயத்திலும் இன ஒதுக்கல் கொள்கை வெற்றிபெற முடியாது.

சுரங்கத் தொழிலாளர்களில் நூற்றுக்கு எண்பத்தேழு பேர் நீக்ரோக்கள். பண்ணைத் தொழிலாளர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்று இரண்டு பேர் நீக்ரோக்கள். வியாபாரத்தில் நூற்றுக்கு முப்பதுபேர் நீக்ரோக்கள்.

மார்ச் மாத ஆரம்பத்தில் பான் ஆப்பிரிக்கனிஸ்ட் காங்கிரஸ் பாஸ் முறையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திற்று. பாஸ் எடுத்துக்கொண்டு செல்லாமல்நடமாடுவது; அதனால் சிறை செல்வது ; சிறைக்கூடங்களை நிரப்புவது ; அதன் பயனாக நாட்டின் வியாபாரம், தொழில், சுரங்க வேலை, பண்ணை வேலை முதலியவற்றை நடக்கவிடாமல் செய்து, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்வதே கிளர்ச்சியின் நோக்கம்.

மார்ச் 21-ந் தேதி ஜோகன்னெஸ்பர்க் கையடுத்த ஷார்ப்வில்என்ற இடத்தில், பெருந்திரளாக நீக்ரோக்கள், போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்து முற்றுகையிட்டனர். கூட்டத்தைக் கலைக்க முயன்ற போலீசார்மீது சிலர் கற்களை வீசினர். போலீசார் மிஷன் துப்பாக்கிகளை உபயோகித்தனர். அதன் பலன் 72 பேர்களுக்கு மரணம் ; நூற்றுக் கணக்கானவர்களுக்குப் படுகாயம். ஆயுதமில்லாத ஜனக் கூட்டத்தின்மீது மிஷன் துப்பாக்கிப் பிரயோகம் செய்த இக்கொடுமை, 1918ஆம் ஆண்டியில் அமிர்தசரஸ் ஜாலியன் வாலா பாக்கில் நடந்த பஞ்சாப் படுகொலையைப் போன்றது என்று இந்தியப் பிரதமர் நேரு கூறினார்.

பாஸ் சட்டத்தை அரசாங்கத்தார் தாற்காலிகமாக நிறுத்தி வைத்தார்கள். பாஸ் முறையை எதிர்த்து நீக்

ரோக்கள் சிறை சென்றுர்கள் என்று பெயர் உண்டாகக் கூடாது என்பதற்காகவே அரசாங்கத்தார் இவ்வாறு செய்திருக்கக்கூடும். சில நாட்களுக்குப் பிறகு பாஸ் முறை மீண்டும் அமலுக்கு வந்தது.

அரசாங்கத்தார் பொதுக் கூட்டங்களைத் தடை செய் தனர். அரசாங்கத்துக்கு விரோதமானவர்கள் வீடுகளைச் சோதனையிட்டனர்.

அந்த வார முடிவில், ஆப்பிரிக்கன் நேஷனல் காங் கிரஸ், பான் ஆப்பிரிக்கனிஸ்ட் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஷார்ப்வில் என்ற ஊரில் மரணமடைந்த தியாகிகளுக்கு அஞ்சலி செய்வதற்காக, ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா நீக்ரோக்களும் வேலைக்கு போகாமல் தங்கள் வீட்டிலேயே தங்குவதன் மூலம் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தன.

வேலைக்குச் செல்லாமலிருந்தாலும், வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினுலும், அந்த நாட்டுச் சட்டப்படி ஏழாயிரம் ரூபாய் அபராதம், ஐந்து வருஷச் சிறைத் தண் டனை, அல்லது இரண்டும். அப்படியிருந்தும் வேலை நிறுத் தம் தொண்ணூறு சதவிகிதம் வெற்றி பெற்றது.

அரசாங்கத்தார் அவசரச் சட்டம் இயற்றினர். முந் நூறு நீக்ரோத் தலைவர்களைச் சிறையிலடைத்தனர். நீக் ரோக்களிடம் அனுதாபமுள்ள இந்தியரையும் வெள்ளைக் காரரையும் சிறையிலடைத்தனர். நீக்ரோ அரசியல் கட்சி கள் சட்ட விரோதமானவை என்று சட்டமியற்றினர். மொத்தம் சிறை சென்றோர் தொகை பதினெட்டாயிரம். "நீக்ரோக்கள் வேண்டுகோளைப் பொருட்படுத்தா விட்

டால், இந்த நாட்டில் அமைதி நிலவ முடியாது" என்றார் ஒரு நீக்ரோத் தலைவர்.

"நீக்ரோக்கள் அதிக பலாத்காரத்தை உபயோகித்தால், நாங்கள் இன்னும் வன்மையுடன் அடக்குவோம்" என்று தென்னாப்பிரிக்காப் பிரதமர் டாக்டர் ஹென்ரிக் வேர்வூட் கூறினார்.

ஷார்ப்வில் படுகொலை நடந்த மூன்று நாட்களுக்குள் 29 ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் ஒன்று சேர்ந்து, தென்னாப்பிரிக்கா சம்பந்தமாக விவாதிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பாதுகாப்புச் சபையைக் கூட்ட வேண்டும் என்று கோரின. அப்பொழுது, பாதுகாப்புச் சபையின் தலைவராக இருந்தவர் அமெரிக்காவின் பிரதிநிதி. புதிதாக உருவாகி வரும் சுதந்திர ஆப்பிரிக்காவோடு நேசஉறவு கொள்வதில் அமெரிக்காவுக்கு ஆர்வம் அதிகம். பிரிட்டனும், பிரான்ஸும் ஆதரிக்காவிட்டாலும் பாதுகாப்புச் சபையைக் கூட்ட தடை செய்யவில்லை.

பாதுகாப்புச் சபைத் தலைவர், இதில் சம்பந்தப்பட இந்தியா, எதியோப்பியா, பாக்கிஸ்தான், கனா, கினியா முதலிய நாடுகளை வாக்களிக்கும் உரிமையின்றிக் கலந்து கொள்ளுமாறு அழைத்தார்.

தென்னாப்பிரிக்காப் பிரதிநிதி பெர்னாடஸ் என்பவர், "ஷார்ப்வில் கலகம் தீவிரவாதிகளால் தூண்டிவிடப் பெற்றது. போலீசார் தற்காப்புக்காகவே சுட்டனர்" என்றார்.

மேற்கு வல்லரசுகள் இவ்விஷயத்தில் பாதுகாப்புச் சபை நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று கூறின.

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகள், கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அவசியமானல் தென்னப்பிரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறின.

"இன ஒதுக்கல் கொள்கையை தென்னப்பிரிக்கா அரசாங்கம் கைவிட வேண்டும். ஐக்கிய நாடுகள் சங்கக் காரியதரிசி, தென்னப்பிரிக்காவுக்குச் சென்று, சர்வதேச சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் எதிராகத் தென்னப்பிரிக்காவில் தோன்றியுள்ள பயங்கர நிலையைக் குறைக்க முயல வேண்டும்" என்று ஈக்வேடார் என்ற நாடு ஒரு தீர்மானம் கொண்டுவந்தது. பிரெஞ்ச் பிரதிநிதி இன ஒதுக்கல் கூடாது என்றும், ஆனல் மற்றொரு உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாதுஎன்றும் கூறினர். பிரிட்டனும் பிரான்ஸும் ஒதுங்கி நின்றன. தீர்மானம் நிறைவேறியது. சாதகமாக 9 பேர் வாக்களித்தனர். பாதகமாக யாரும் இல்லை.

"ஷார்ப்வில் கலகம் அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரானது அன்று. ஏழ்மைக்கும், குறைந்த கூலிக்கும் இந்தக் கலகத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இந்நாட்டில் அடிக்கடி கலகங்கள் தோன்றுவது சகஜம்" என்றார் தென்னப்பிரிக்கப் பிரதமர்.

"நம்முடைய தேசீய வாழ்விலிருந்து இன ஒதுக்கல் முறையை அடியோடு ஒழித்தால்தான் நாடு உருப்படும்" என்று ஸ்ரீமதி பாலிங்கர் தென்னப்பிரிக்கப் பார்லிமெண்டில் கூறினர்.

"உங்களை நாங்கள் உதைத்து விரட்ட விரும்பவில்லை. உங்கள் சகோதரிகளை மணக்க நாங்கள் விரும்பவில்லை

எங்கள் நாட்டில் எங்களுக்கு நியாயமாக உள்ள உரிமைகளையே கேட்கிறோம்'' என்றார் நீக்ரோத் தலைவர் ஆல்பர்ட் லூத்லி.

''இந்நாட்டில் இனப் பிரச்னை உண்டு. வெள்ளையரல்லாதாருக்கு நியாயமான குறைகள் உண்டு. அனுதாபத்தோடு விவாதிப்போம் என்று தைரியமாகக் கூறும் ஒரு தலைவர் இந்நாட்டில் உண்டாகாதவரை, இந்நாட்டில் மகிழ்ச்சி ஏற்படாது'' என்று ராண்ட் டெயிலி மெயில் என்னும்தென்னுப்பிரிக்கப் பத்திரிகை கூறுகிறது.

''தென்னுப்பிரிக்க அரசாங்கம் தன்னுடைய இன ஒதுக்கல் கொள்கையை விடாத வரையில், அந்நாட்டில் மரணமும் இரத்தப் பெருக்கும்தான் உண்டாகும். நீக்ரோக்களின் ரத்தம் மட்டும் அன்று; வெள்ளைக்காரர்களின் ரத்தமும் பெருகும்'' என்று 'பால்டிமோர் சன்' என்னும் அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறது.

''எங்கள் நாட்டில், தற்பொழுது உள்ளதைப் போன்ற, வெள்ளைக்காரருக்கும்—நீக்ரோக்களுக்கும் இடையே உள்ள நல்லுறவு, இது வரையில் ஏற்பட்டதேயில்லை'' என்று தென்னுப்பிரிக்க நீக்ரோ சம்பந்தமான மந்திரி டி. வெட் நெல் கூறினர்.

''வெள்ளையர் ஆதிக்கம் எப்பொழுதுமே தென்னுப்பிரிக்காவில் இருக்க வேண்டும் என்று நம்புவது பகற்கனவு'' என்று ''லண்டன் டைம்ஸ்'' கூறுகிறது.

''மெஜாரிட்டியை, அவர்களை அமுக்கி வைத்தாலும் கூட, அவர்களிடம் ஓர் அறிய வெற்றியை அளிக்கும் ஆயுதம் உண்டு. அது அவர்களின் எண்ணிக்கையே. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை ஸ்தம்பித்து விடக்கூடிய

ஆற்றல் அவர்களிடம் உண்டு. இனவெறியர்கள் இதை உணர வேண்டும்'' என்று அமெரிக்காவில் வெளியாகும் "டிராய்ட் நியூஸ் கூறுகிறது.

"டாக்டர் வெர்வுட் தமது பிரதமர் பதவியை ராஜி நாமாச் செய்ய வேண்டும். வெள்ளைக்காரர்—நீக்ரோ ஆகிய இரு இனங்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவர் பிரதமராக வரவேண்டும்'' என்று "லண்டன் டெயிலி டெலிகிராப்'' எழுதுகிறது.

" மற்றொரு நாட்டைப் பிணமாக்கி, அதன் மீது எந்த ஒரு நாடும் நடக்கமுடியாது. நாங்கள் இறக்க மாட்டோம். யாருடைய பிணமும் ஆக மாட்டோம். உயிரோடு இருக்கப் போராடுவோம். நிச்சயமாக உயிரோடு இருப்போம்'' என்று தென்னப்பிரிக்கப் பிரதம மந்திரி டாக்டர். ஹென்ரிக் பிரான்ஸ் வெர்வுட், தமது அரசாங்கக் கொள்கைகளை ஆதரித்து, ஏப்ரல்மாதம் ஒன்பதாம் தேதி ஜோகன்னெஸ் பர்க்கில் ஒரு விவசாயப் பொருட்காட்சியைத் திறந்து வைத்த பொழுது பேசினர்.

அவர் பேசி முடித்து, நாற்காலியில் உட்கார்ந்த சில விநாடிகளுக்குள் ஒரு வெள்ளைக்காரர் எழுந்து, பிரதமர் முன் சென்று, அவர் முகத்தில் இரு முறை சுட்டார். இந்தச் சம்பவம் இனக் கலகத்தை அதிகப்படுத்திற்று. தெய்வாதீனமாக டாக்டர் வெர்வுட் பிழைத்தார்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்

KUMARI MALAR REGD. NO. M. 4819

